விலை: 60.00
பக்கங்கள் : 20 + II
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


# வலம்புரி

## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 068 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 13 ஞாயிற்றுக்கிழமை (25.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் இல்லை இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்

## சம்பிக்க ரணவக்கவிடம் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)
"ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் என்னிடம் இல்லை. இவ்வருடம் குறித்த நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். அடுத்த வருட ஆரம்பத்தில் பாராளுமன்றத் தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளோம்" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பிக்க ரணவக்கவிடம் தெரிவித்தார்.
பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணியின் "நாட்டுக்கான ஒன்றுபட்ட நடவடிக்கை" என்ற ▷19

## மத்திய வங்கி ஆளுநர் கிளிநொச்சிக்கு விஜயம்

(கிளிநொச்சி)
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்தார்.
நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வங்கி ஊழியர்களுக்கான செயலமர்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த போதே கிளிநொச்சி அறிவியல்நகரில் ▷19

# உக்கிரமடைந்துள்ள மீனவர் பிரச்சினை

## கலந்துரையாட முன்வருமாறு இந்தியாவிடம் அலி சப்ரி கோரிக்கை



(கொழும்பு)
உக்கிரமடைந்துள்ள இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாட முன் வருமாறு இந்திய அரசிடம் வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி கோரிக்கை விடுத்துள்ளார்.
(19ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய படகுகளுக்கு எதிராகப் போராட்டம்

### யாழ்.கடற்றொழில் சம்மேளனம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)
இந்திய இழுவைப் படகுகளுக்கு எதிரான கறுப்புக் கொடி போராட்டம் ஒன்றினை இந்திய - இலங்கை கடல் எல்லையில் நடத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்பு ▷19

## சட்டத்துக்குட்பட்டே இந்திய மீனவர்கள் கைது

### கடற்படைத் தளபதி



(கொழும்பு)
மீனவர் கைது காரணமாக கச்சதீவு திருவிழாவை புறக்கணித்தோம் என்ற இந்திய மீனவர்களின் நியாயப்படுத்தலை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின் சட்டத்துக்கு ▷19

இன்று முதல்
சங்குநாதத்தில்



செங்கை ஆழியானின்
களம் பல கண்ட
யாழ்.கோட்டை
வாசிக்கத் தவறாதீர்கள்

### இறக்குமதி செய்யப்படும்

## அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடையும்



(கொழும்பு)
இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடையும் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி கடந்த ▷19

## கத்தியால் குத்தியதில் இளைஞன் உயிரிழப்பு

### மாங்குளத்தில் சம்பவம்

(முல்லைத்தீவு)
வீதியால் பயணித்த இளைஞனை வழிமறித்து கத்தியால் குத்தியதில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.
முல்லைத்தீவு - மாங்குளம், தச்சடம்பன் பகுதியில் நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
இதில் விஜயராசா சோபிதன் (வயது-27) ▷19

## நாட்டில் 70 சதவீதமான மக்கள் ஒருவேளை உணவை குறைத்துள்ளனர்

### ரோஹிணி குமாரி எம்.பி தெரிவிப்பு



(கண்டி)
நாட்டில் தற்போது 70 சதவீதமான மக்கள் நாளாந்தம் ஒருவேளை உணவை குறைத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி தெரிவித்துள்ளார்.
கண்டியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். ▷18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு கணனி ரைப்பிங் செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை. சகல விபரங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

(19248)

**077 728 6050**

செல்வா ரெலி கொமினிகேசன்
124, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

T.V.S WEGO மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

(19266)

**077 706 6487**

யாழ்ப்பாணம்

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை


WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8406)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378**
**076 097 3127**

# மரண அறிவித்தல்



## வேலாயுதபிள்ளை நல்லநாதன்

**தோற்றம் : 09.08.1935**
**மறைவு : 18.02.2024**

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் Canada Toronto வை வசிப்பிடமகவும் கொண்ட வேலாயுதபிள்ளை நல்லநாதன் அவர்கள் கடந்த 18.02.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி வேலாயுதபிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான எட்வின் சின்னப்பு - றேபேக்கா பூரணம் தங்கராஜா தம்பதியரின் பாசமிகு மருமகனும் சத்தியவதி நல்லநாதன் (மணி) அவர்களின் அன்புக் கணவரும் ரஞ்சனி (லண்டன்), சாந்திகுமார் (கனடா), ஜீவா (ஜேர்மனி), சுபாஷினி (சுட்டி - லண்டன்), மகிந்தா (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜனார்தனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாமுவேல் கிறிஷ்ணசாமி, மல்லிகா, பாஸ்டர் அழகேந்திரன், காலஞ்சென்ற பிலிப்பு போல் வில்சன், மாகிறேட் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான வடிவேற்கரசர், வைகுந்தநாதன், பராசக்தி, தையல்நாயகி, அருந்ததிநாயகி, நீலாம்பிகை, உலகநாதன் (லண்டன்), அருமைநாதன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கனடாவில் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். https://video.ibm.com/channel/s5CHH26bSXz

(19268)

தகவல்:
வே.அருமைநாதன் (இலங்கை) - 076 669 5807 குடும்பத்தினர்

## பணியாளர் தேவை

உரும்பிராயில் அமைந்துள்ள சூப்பர் மாக்கட்டிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

கூலியாள் - ஆண்

இரவு நேரங்களில் பணிபுரிய கூடியவர்கள் தேவை. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.

(19272)

Happy Super Market
**076 422 1761**

## காணி விற்பனைக்கு

ராஜ பாதை வீதி , கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது.


(19251)

**075 970 1948**

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினர்களான திரு. **க.ஜெயரூபன்**
(தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பருத்தித்துறை நகரசபை ),
திருமதி **அ.றஞ்சனாமதி**
( தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பருத்தித்துறை நிறைவேற்று பொறியியலாளர் பணிமனை, வீதி அபிவிருத்தி )
ஆகியோரின் அன்புத் தந்தை

**இராசையா கணபதிப்பிள்ளை**



அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(19258)

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் - வடமாகாணம்**

# மரண அறிவித்தல்



**தோற்றம் : நவம்பர் 24. 1930**
**மறைவு : பெப்ரவரி 21. 2024**

## சண்முகம் பொன்னையா பாலசிங்கம்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வாழ்விடமாகவும் தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீலங்கா நிர்வாக சேவை முன்னாள் யாழ். மாவட்ட உதவி அரசராகப் பணியாற்றி இளைப்பாறிய திரு. சண்முகம் பொன்னையா பாலசிங்கம் அவர்கள் கடந்த புதன்கிழமை, பெப்ரவரி 21, 2024 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

இவர் பொதுநிருவாக உள்நாட்டு அமைச்சில் முகாமைத்துவ உத்தியோகத்தவராகவும், முன்னாள் யாழ். மாவட்ட அமைச்சரின் இணைப்புச் செயலாளராகவும், யாழ். விற்பனைத் திணைக்கள உதவி ஆணையாளராகவும், நல்லூர், அச்சுவேலி கிராம சபைகளின் விசேட ஆணையாளராகவும், நாயன்மார்கட்டு இராச இராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்மன் தேவஸ்தானத் தலைவராகவும், இன்னும் பல சேவைகளை ஆற்றியவராவார். மேலும் இவர் கனடா யுத்தகால ஊனமுற்றோருக்கு உதவும் பணியகத்தில் (War Amps, Canada) கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னர், நீண்ட கால தொண்டனாக Tuxedo Court கட்டிடப் பிரதிநிதியாக கடமையாற்றியவருமாவார்.

அன்னார், நாயன்மார்கட்டு காலஞ்சென்ற போதிய பணக்காரன் சின்னதம்பி சண்முகத்தின் பேரனும், காலஞ்சென்ற பொன்னையா- சிவக்கொழுந்து தம்பதிகளின் ஏக புத்திரனும், கொக்குவில் காலஞ்சென்ற செல்லப்பா சோமசுந்தரம் பவளம்மா அவர்களின் மருமகனும், சரோஜினிதேவியின் அன்பு கணவரும், வாசுகி(அமெரிக்கா), பாலரவி (அமெரிக்கா), ஜானகி (அமெரிக்கா), தேவகி (அமெரிக்கா), சித்ரா, MD (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கஜேந்திரன் பொன்னுத்துரை (அமெரிக்கா), பவானி, MD (அமெரிக்கா), சுகுமார் சண்முகரட்ணம் (அமெரிக்கா), ரவிச்சந்திரன் ரட்ணசிங்கம் (அமெரிக்கா), ரவீந்தர் டிக்கு, MD (அமெரிக்கா) ஆகியோரின் மாமனாரும் Sophia (அமெரிக்கா), Sonia, MD & Anand (அமெரிக்கா), Julia & Ranga (அமெரிக்கா), Sanje (அமெரிக்கா), Ramyiah (அமெரிக்கா), Dhanesh (அமெரிக்கா), Kiran (அமெரிக்கா), Jay (அமெரிக்கா) அவர்களின் அன்பார்ந்த பேரனும் காலஞ்சென்ற இராசலெட்சுமியின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிற்றம்பலம் ஆறுமுகம் அவர்களின் மைத்துனரும் அருணாவதி & சண்முகரத்தினம், காலஞ்சென்ற உதயகுமார் & குமாரி, காலஞ்சென்ற சிறீதரன், மங்களேஸ்வரி & குகதாசன், ஸ்ரீமதி & வனஞ்சரஞ்சன், சிவநேசன் & விக்னேஸ்வரி, அருள்நேசன் & கயல்விழி, அருள்மொழி & யோகராஜா ஆகியோரின் அன்பு மாமனருமாவார்.

அன்னாரது பூதவுடல் Ajax Crematorium இல் ஞாயிற்றுக்கிழமை பெப்ரவரி 25 அன்று மாலை 5 மணி முதல் 9 மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் திங்கட்கிழமை பெப்ரவரி 26 அன்று காலை 8 மணிக்குக் கிரியைகள் நடைபெற்ற பின் 11 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
பாலசிங்கம் குடும்பம் (416) 438-7755/
பாலரவி பாலசிங்கம் +1(908) 512 - 4474/
ஜானகி சுகுமார் +1 (908) 303-1075

(19255)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை பாதிக்கும் வகையில் இலங்கை செயற்படாது

## வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் உறுதி

(டில்லி)

**இந்தியாவின் பாதுகாப்பு கரிசனைகளுக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் இலங்கையை வேறொரு நாடு பயன்படுத்த விட மாட்டோம் என்று வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இந்தியாவுக்கு உறுதியளித்துள்ளார்.**

புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

பாதுகாப்பு விடயங்கள் குறித்து இந்தியா கவலைப்படக் கூடாது.

சர்வதேச நீரோட்டத்தில் இந்தியாவின் வளர்ந்து வரும் அந்தஸ்தை நாங்கள் அறிவோம்.

இந்தியாவின் பாதுகாப்பு விடயத்தில் எந்த மூன்றாம் தரப்பினரும் அல்லது நாடும் இலங்கையை பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம்.

எனவே நேர்மையான கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் எந்த பிரச்சினையையும்சமாளிக்க முடியும் என்று பாலசூரிய தெரிவித்தார்.

"நாங்கள் எந்த நாட்டுடனும் வர்த்தகம் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை எங்களுக்கு ஒரு சிறந்த உறவு உள்ளது.

சீனாவுடனான எங்கள் உறவைப் பற்றி இந்தியா கவலைப்படக்கூடாது என்று நான் நினைக்கிறேன்.

சீனாவுடன் மட்டுமல்ல மேற்கத்தேய நாடுகள், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடன் எங்களுக்கு நல்ல உறவு உள்ளது என்றும் இலங்கையின் வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார். (நி)


















யாழ்ப்பாணம் உயர்கல்விக் கண்காட்சி வலம்புரி விடுதியில் நேற்று ஆரம்பமானது. இரு நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சிக் கூடத்தை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் திறந்து வைத்தார். பல்வேறு துறைசார் கல்வி நிறுவனங்கள், தொழிற்கல்வி நிறுவனங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழகங்களும் துறைசார் நிபுணர்களும் இதில் கலந்து சிறப்பிப்பது குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் திருப்பதி
அருள்மிகு
திருவேங்கடேஸ்வரர் ஆலயம்
இணுவில் மருதனார்மடம்

## இலட்சார்ச்சனையும் மகாயாகமும் 2024

ஆரம்பம் : 27.02.2024 செவ்வாய்க்கிழமை
முடிவு : 07.03.2024 வியாழக்கிழமை
நேரம் : தினமும் மாலை 4.30 மணி முதல் 7.30 இரவு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

### யாக விபரமும் பயன்களும்

| | |
|---|---|
| 1ம் நாள் (27.02.2024) | : மஹறா சுதர்சன சக்கர ஹோமம் - வீரம் பெறவும் மற்றும் சகலவித தடை விலகவும் |
| 2ம் நாள் (28.02.2024) | : கயக்கிரீவ ஹோமம் / மேதாசூக்த ஹோமம் - சிறந்த கல்வியைப் பெற |
| 3ம் நாள் (29.02.2024) | : தன்வந்திரி ஹோமம் / ஆயுஷ்ய ஹோமம் - நோய் நொடி நீங்க |
| 4ம் நாள் (01.03.2024) | : இலக்ஷ்மி நரசிம்ம ஹோமம் - தீய சக்திகளில் இருந்து விலகி இலக்ஷ்மி கடாட்சம் பெற |
| 5ம் நாள் (02.03.2024) | : சந்தான கோபால ஹோமம் - பிள்ளைப் பாக்கியம் பெறுவதற்கு |
| 6ம் நாள் (03.03.2024) | : இலட்சுமி ஹோமம் / தன ஆகர்ஷண லக்சுமி ஹோமம் - ஶ்ரீ சூக்த ஹோமம் - செல்வம் பெறுவதற்கு |
| 7ம் நாள் (04.03.2024) | : நாராயண சூக்த ஹோமம், புருஷ சூக்த ஹோமம் - சர்வ சித்தி |
| 8ம் நாள் (05.03.2024) | : சம்பரண சூக்த ஹோமம் - நாட்டில் உள்ள குழப்பங்கள் நீங்க |
| 9ம் நாள் (06.03.2024) | : விஷ்ணு சகஸ்ர நாம ஹோமம் - சர்வ சித்தி |
| 10ம் நாள் (07.03.2024) | : பகவத் கீதா ஹோமம் - சர்வசித்தி பெறல், தாரா ஹோமம், மகா பூர்ணாகுதி மாலை 7.00 மணிக்கு கும்ப வீதியுலா, சுவாமி வீதியுலா, கும்ப புரோட்சணம், பெரிய பெருமாள் அருள் தரிசனம் |

021 224 2300 (19269)

ஆலய தர்ம கர்த்தா
ச.கணேசலிங்கம்



# RAVEENS EMC

Singathin Veedu, Karaveddy East, Karaveddy.
- 021 226 3321 :easwaran1949@gmail.com
Web:WWW.raveensemc.com

Mr.P.Easwaranathan B.Sc(Hons) Ag.Dip.in.Edu
Justice of the Peace
Director

## ENGLISH MEDIUM Gr 06 ADMISSION RESULT 2024

| NO | Name | Scholarship Marks | School Name | English | Maths | Total | Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | T.Srinigeth | 176 | J/N.M.M.T.M.S | 84 | 80 | 164 | 1 |
| 2 | T. Theshna | 173 | J/N.M.M.T.M.S | 74 | 67 | 141 | 2 |
| 3 | M. Saaruja | 159 | J/N.M.M.T.M.S | 80 | 60 | 140 | 3 |
| 4 | G. Laavanyan | 158 | J/T.K.V | 68 | 69 | 137 | 4 |
| 5 | G. Tushany | 161 | J/T.K.V | 77 | 60 | 137 | 5 |
| 6 | A. Aathmeka | 151 | J/T.K.V | 68 | 67 | 135 | 6 |
| 7 | K. Asvanth | 174 | J/N.M.M.T.M.S | 57 | 74 | 131 | 7 |
| 8 | K. Harish | 165 | J/M.V | 63 | 61 | 124 | 8 |
| 9 | S. Ashmiya | 170 | J/M.V | 57 | 64 | 121 | 9 |
| 10 | S. Ajay | 170 | J/M.V | 63 | 57 | 120 | 10 |
| 11 | V. Abinaiya | 158 | J/T.K.V | 69 | 50 | 119 | 11 |
| 12 | R. Kamshika | 154 | J/M.V | 65 | 53 | 118 | 12 |
| 13 | R. Vepisa | 154 | J/M.V | 73 | 44 | 117 | 13 |
| 14 | M. Srihari | 159 | J/T.K.V | 34 | 81 | 115 | 14 |
| 15 | K. Ashwin | 156 | J/N.M.M.V.M.S | 59 | 53 | 112 | 15 |
| 16 | K. Arthiga | 155 | J/N.M.M.V.M.S | 64 | 47 | 111 | 16 |
| 17 | V. Akchana | 162 | J/M.V | 54 | 56 | 110 | 17 |
| 18 | R. Abarna | 164 | J/M.V | 49 | 55 | 104 | 18 |
| 19 | S. Aakshayan | 147 | J/T.K.V | 54 | 43 | 97 | 19 |


J/N.M.M.T.M.S | J/Nelliady Methodist Mission Tamil Mixed School (Arasady)
J/M.V | J/Manikkavasagar Vidyalayam(Karaveddy)
J/T.K.V | J/Thunnalai Kasinathar Vidyalayam

- Only 19 Students are selected for an interview
- Admission will be confirmed after the results of the interview.

(C-8408)

P.Easwaranathan
Director


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## கார்த்திகேசு செல்லத்துரை

( சோபனா நகைமாடம் - உரிமையாளர் )

தோற்றம் : 1951.02.14
மறைவு : 2024.01.30

கடந்த 30.01.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 27.02.2024 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 29.02.2024 வியாழக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து 11.00 மணியளவில் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இடம்பெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத்தளங்களினூடாகவும் அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும், பதாகைகள், துண்டுப்பிரசுரம், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் வீட்டிற்கு வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

359/12 கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(19274)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ-சிகரெட்டுகளால் பாதிப்படையும் கண்கள் மற்றும் மூளை

## தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டப்பாட்டுச் சபை

(கொழும்பு)

ஈ - சிகரெட்டுக்கள் என்ற இலத்திரனியல் புகையிலை பயன்பாடு காரணமாக கண்கள்மற்றும் மூளையில் கடுமையான விளை வுகள் ஏற்படுவதாக தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, பல்வேறு வகை யான பழங்களின் வாசனை வெளி ப்படும் வகையில் தயாரிக்கப்படும் ஈ - சிகரெட்டுக்கள் தொடர்பில் பெற்றோர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என அந்த சபை கோரியுள்ளது. பாடசாலை மாணவர்கள் மற் றும் இளைஞர்கள் மத்தியில் ஈ-சிகரெட்டுக்கள் அதிகம் விரும்பப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் ஆண்டு பொதுக்கூட்டம்-2024

இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்தின் ஆண்டு பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 17.03.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கழகத்தின் அங்கத்தவர்கள் தங்கள் அங்கத்துவ கட்டணத்தை எதிர்வரும் 10.03.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரியில் காலை 10.00 மணிதொடக்கம் 12.00 மணி வரை கழகப் பொருளாளரிடம் செலுத்தி தமது அங்கத்துவத்தினை புதுப்பித்துக் கொள்வதுடன் அனைவரையும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

செயலாளர்,
யங்ஹென்றீசியன் வி.க,
இளவாலை.

போஷகர்,
யங்ஹென்றீசியன் வி.க,
இளவாலை.

(9261)

## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வட கிழக்கு கலட்டி வீர கத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன் கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும். மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டபபூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதிவலம் வருவார் என பிர தம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறியத் தருகிறார். (நி)


## விற்பனைக்கு

Restaurant ஒன்றிற்கு தேவையான தளபாடங்கள்/உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.

- Large Upright Chillers
- Food Chiller
- Salad Dispenser
- Large Fridge
- Bottle Cooler
- Deep Fryers
- Cookers
- Table
- Grinder
- Deep Freezers
- Large Gas Slinder
- Burger Plate With Cooker

(9263)

தொடர்பு எண்:- 077 653 3221


## சென்.ஜோன்ஸ் கல்லூரி
## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## தரம் 01, 06 இற்கான மாணவர் அனுமதி-2025

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.03.2024 முதல் 28.03.2024 வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 28.03.2024 வியாழக் கிழமை. அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நாட்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

3. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photocopy) இணைக்கப்பட வேண்டும்.

4. **வயதெல்லைகள்**

அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2019இற்கும் 31.01.2020இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

ஆ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2014 இற்கும் 31.01.2015 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

5. தமிழ் அல்லது இருமொழிமூல கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்படலாம்.

6. தரம் 01 இற்குரிய நேர்முகப்பரீட்சைக்கான திகதியும் தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சைக்குரிய திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

### தரம் 12 (A/L 2026) இற்கான அனுமதி

- தரம் 12 இற்கான **(A/L 2026 Batch)** விஞ்ஞானம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்), கணிதம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்), வர்த்தகம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்) ,கலை (தமிழ் மொழிமூலம்), தொழில்நுட்பவியல் (தமிழ் மொழிமூலம் -சென். ஜோண்ஸ் கல்லூரியில் மட்டும்). விண்ணப்பங்கள் அந்தந்த கல்லூரிகளில் க.பொ.த சா/த பரீட்சை 2023(2024) பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றவுடன் ஏற்றுக்கொள்ளப்படும். இது தொடர்பாக அந்தந்தக் கல்லூரி அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**குறிப்பு**

- தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது.
- சென்.ஜோண்ஸ் கல்லூரியில் தரம் 6 இற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களில் தகுதியான மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வாய்ப்புகள் வழங்கப்படும்.

**அதிபர்கள்** (சி-8405)

# இராசிபலன்

25.02.2024
மாசி 13, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை முன்னிரவு 8.42 மணிவரை
பூரம் பின்னிரவு 1.28 மணிவரை

சுபநேரம் -9.29-10.59 மணிவரை
இராகுகாலம்-4.59-6.29 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்
உத்தராடம், திருவோணம்.

**வளவன்**

**மேஷம்:** சுபநிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாடு ஆனந்தம் தரும்.

**ரிஷபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், தனவரவில் இருந்த தடைகள் விலகும், வாகன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கடகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலை தூரத்திலிருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** குடும்ப பொறுப்புக்கள் கூடும், அடுத்தவர் விவகாரங்களில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**தனுசு:** தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள்.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்:** குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.


**மீனம்:** நினைத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகும், திறமைகள் வெளிப்படும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

சந்தோசம் ஒரு விசம் போன்றது. அளவைக் கடக்கும்போது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு திருவிழாவில் 4,454 இலங்கையர்கள்


## இந்தியர்கள் புறக்கணிப்பு



(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி நிகழ்வு நேற்று காலை 7 மணிக்கு யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இந்த திருவிழாவில் இலங்கையில் இருந்து 4,454 பக்தர்கள் கலந்து கொண்ட நிலையில் இந்திய பக்தர்கள் கடற்றொழிலாளர்களின் விடுதலையை வலியுறுத்தி எவரும் வருகை தர வில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஙி)



கீரிமலை பதியுறை அருள்மிகு நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழாவானது நேற்று மு.ப 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

(படங்கள்: சிவசாந்தன்)

# பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸாரின் செயற்பாட்டிற்கு இடையூறு விளைவித்த பெண் ஒருவரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைக்காக அழைக்கப்பட்ட மேற்படி பெண் பொலிஸாருடைய குரலை தொலைபேசியில் ஒலிப்பதிவு செய்த நிலையில் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஙி-30)

### மலையகம் தொடர்பான

# கலைநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மலையகத்தமிழர்கள் இலங்கைக்கு வந்தமையின் 200 ஆண்டுகள் நிறைவினை ஒட்டி இலக்கியம், திரைப்படம் நடன ஆற்றுகை என்பவற்றினை உள்ளடக்கிய ஒருநாள் நிகழ்வினை கிறேஷியன் ட்ரஸ்ட் அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளனர். யாழ். பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும். (ஙி)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆற்றல் மிகு ஈழத்தமிழ் சமூகத்தை உருவாக்க கலைப் பணி ஆற்றுவோம் என்ற கருப்பொருளிலான கலந்துரையாடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00மணிக்கு யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதியில் அமைந்துள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் இடம்பெற உள்ளது. (ஙி-33)

# கஞ்சாவுடன் கைது

(சாவகச்சேரி)


கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகரப்பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே 1 கிராம் 100 மில்லிகிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தமைக்காக கைது செய்யப்பட்டுள்ளார். (ஙி-30)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3049

### நந்தினி

நம்ம பிரச்சினையை நம்ம பிரண்ட்ஸ் கிட்ட போய் சொன்னா.. பிரச்சினை தீருதோ இல்லையோ



அவனுங்க நம்மள கலாய்க்கிறதில பிரச்சினையே மறந்து போய்டுது..

### சுபா

அண்ணே உங்க பழக்கடையில எல்லா வகைப் பழமும் இருக்கா? இருக்கு தம்பி



அப்ப ஒரு கிலோ ஞானப்பழம் குடுங்க. அத சாப்பிட்டாலாவது ஞானம் வருதான்னு பார்ப்போம்.

### கிரி

ஆண்களின் வாழ்க்கையில் வரும் ஆறு விதமான தோசைகள்.

திருமணத்திற்கு முன்...
1)எண்ணெய்த்தோசை...
2)நெய்த்தோசை...
3)முட்டைத்தோசை...

திருமணத்திற்கு பின்
4)தீஞ்சு போன தோசை...
5)காஞ்சு போன தோசை...
6)நேற்று சுட்ட தோசை...

### சங்கீதா

பணம் வச்சிருக்கிறவன் பணக்காரன் இல்லடா...



படுத்த உடனே தூங்குறான் பாரு அவன்தான்டா பணக்காரன்



### பவன்

என்னடி அந்த காதல் ஜோடியை அப்படி பார்த்துக்கிட்டு இருக்க..?



ம்ம்... என் வீட்டுக்காரரும் நானும் காதலிக்கும் போது இப்படிதான் உட்கார்ந்து பேசிக்கிட்டு இருந்தோம். நல்லா பாரடி.. அது உங்க வீட்டுக்காரர்தான்..

### விஜய்

வாழ்க்கை நமக்கு பிடிச்சவங்கள டெய்லியும் பார்க்க வைக்காது.



ஆனால் பிடிக்காதவங்கள டெய்லியும் பார்க்க வைச்சிடும் இந்த வாழ்க்கை.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 429
Viber 076 636 3378



# சர்வதேசத்தை பலமாய் நம்பும் தமிழினம்

> தமிழினத்துக்கான நீதி மறுக்கப்படுகின்றது. அவர்களின் உரிமைகள் இன்று வரை கிடைக்கப்பெறவே இல்லை. தமிழினத்தின் வளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. தமிழினத்தின் நிலங்கள் சூறையாடப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.
> இவை அனைத்துக்கும் தீர்வு வேண்டும். அந்தத் தீர்வு இறுதியுத்தத்தில் நடந்த இன அழிப்பிற்கான நீதியினூடாகவே கிடைக்க வேண்டும்.

உரிமை மறுப்பு என்பது எவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான விடயம் அல்ல. உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் தமது உரிமைக்காகப் போரிட்டுக் கொண்டு தான் இருக்கிறது.

இதில் மனிதன் ஒன்றும் விதிவிலக்கில்லை. அடிமைப்பட்ட இனம் ஒரு நாள் விழித்தெழும். அந்த எழுதல் என்பது வரலாற்றை மாற்றிய எழுதலாயே இருக்கும்.



இலங்கையில் ஈழத் தமிழினத்தின் உரிமைக்கான எழுதலும் அப்பேற்பட்டதே.

தனது உரிமைகளை தரமறுத்த பேரினவாதத்திற்கு எதிராக ஈழத் தமிழினத்தின் எழுச்சி முற்றுப் பெறாது போனது எதனால் என்பதை சகலரும் நன்கறிவோம்.

ஆம், துரோகமே ஈழத் தமிழினத்தின் எழுச்சியை தோற்கடித்தது என்பதை நாம் இவ்விடத்தில் ஆணித்தரமாக கூறிவிட முடியும். அந்தளவிற்கு கூடவே இருந்து குழிபறிக்கும் துரோகத்தனங்களே ஈழத் தமிழினம் முள்ளிவாய்க்கால்வரை சென்று அவ்வளவு அழிவுகளையும் சுமந்து நிற்க காரணமாகிறது.

ஈழத் தமிழினத்தின் வீழ்ச்சிக்கு காரணமான துரோகத்தனங்களை இங்கு பட்டியல் இடுவோமாக இருந்தால் இவ்விடம் போதாது.

தவிர, ஈழத் தமிழினத்தை கருவறுத்தவர்கள் யார் என்பதையும் தமிழ் மக்கள் நன்கறிவர்.

ஆதலால் இவ் விடயத்தைப் பற்றி பேசுவதை தவிர்த்துக் கொள்ளலாம்.

எனினும் ஈழத் தமிழினம் பட்ட இன்னல்களுக்கும் அழிவுகளுக்கும் பதில் கூற வேண்டியவர்கள் பதில்கூறியே ஆக வேண்டும்.

அவர்கள் பதில் கூறாவிடின் பரவாயில்லை. காலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு தகுந்த பாடத்தைக் கற்பிக்கும் என்பதில் தமிழினம் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறது.

இலங்கையில் காலம் காலமாக ஆட்சி பீடமேறிய பெரும்பான்மை ஆட்சியாளர்களின் கபடத்தனங்களின் வெளிப்பாட்டை சர்வதேசம் புரிந்து கொள்ளாமல் கண்மூடிக் கிடந்ததன் விளைவே முள்ளிவாய்க்கால் வரை தமிழின அழிப்பு நடந்தேறியது.

அண்மையில் மலையக மக்களுக்கான இந்திய வீட்டுத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு கருத்தை முன் வைத்திருந்தார்.

அதாவது வடக்கு- கிழக்கு மக்களின் உரிமைகளை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் இருக்கிறேன் என்றவாறு அவர் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

நாட்டில் மண்டிக்கிடந்த பயங்கரவாதத்தை அழித்து விட்டதாய் 2009 இல் சர்வதேசத்திற்கு அறிவித்திருந்தது இலங்கை அரசாங்கம்.

பயங்கரவாதம் அழிக்கப்பட்டுவிட்டது. இனி தமிழினத்துக்கான உரிமைகள் அனைத்தும் வழங்கப்படும் எனக் கூறி 14 ஆண்டுகள் கடந்தாகிவிட்டன.

ஆனால் இன்றுவரை தமிழினத்துக்கான நீதி கிடைத்ததாய் இல்லை.

தமிழினத்துக்கான நீதி மறுக்கப்படுவதை அடியோடு மறுத்த இலங்கை ஆட்சியாளர்கள், ஒரு சில தமிழ் அரசியல்வாதிக்ளின் ஆதரவை சர்வதேசத்திற்கு காட்சிப்படுத்தி தமிழினத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந் நிலையிலேயே, தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் உள்ளேன் எனும் ஜனாதிபதியின் கருத்து பேசுபடுபொருளாக மாறியிருக்கிறது.

தமிழினத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.அவர்கள் இந்த நாட்டில் சகல உரிமைகளுடனும் வாழ்கிறார்கள் என ஆட்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால் ஜனாதிபதியோ தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் உள்ளேன் என்கிறார்.

எனின், இவ்விரண்டு கூற்றுக்களுக்குமிடையில் உள்ள முரணைப் புரிந்து கொள்ள முடியும். இவ்வேளையில் ஜே.வி.பி யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் ஒரு விடயத்தை மனந்திறந்துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கு எதிரான போருக்கு ஜே.வி.பி ஒத்துழைப்பு வழங்கியதாக ஊடக சந்திப்பொன்றில் அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

போர் நிறைவு பெற்று 14 ஆண்டுகள் கடந்த நிலையில் ஜே.வி.பி யின் தலைமையிடத்தே தவறை ஒப்புக் கொள்ளும் மனநிலை ஏற்பட்டிருக்கிறது.

ஜே.வி.பி யினரிடையேயான குறித்த மாற்றம் எப்படி ஏற்பட்டது என்பது குறித்து நாம் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லையாயினும் அண்மையில் இந்தியாவின் அழைப்பின் பேரில் ஜே.வி.பி யின் தலைவர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டதன் பின்னர் அவரிடத்தே ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பில் நாம் நிச்சயம் கவனம் செலுத்த வேண்டும்.

ஆட்சியாளர்கள் ஆயிரம் பேசலாம். ஆனால் தமிழினத்துக்கான நீதி மறுக்கப்படுகின்றது. அவர்களின் உரிமைகள் இன்று வரை கிடைக்கப்பெறவே இல்லை. தமிழினத்தின் வளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன.தமிழினத்தின் நிலங்கள் சூறையாடப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

இவை அனைத்துக்கும் தீர்வு வேண்டும். அந்தத் தீர்வு இறுதியுத்தத்தில் நடந்த இன அழிப்பிற்கான நீதியினூடாகவே கிடைக்க வேண்டும். இந்த விடயங்களுக்கு நீதி கிடைக்கும் போது தமிழினம் தனது பூர்வீகத்தில் தனது பண்பாடு, கலாசாரம் சிதையாமல் தனது சுயங்களுடன் வாழும்.

அந்த வாழ்வையே தமிழினம் விரும்புகிறது.அதை இலங்கை ஆட்சியாளர்களினால் ஒருநாளும் பெற்றுத்தர முடியாது என்பதை உணர்ந்து கொண்ட தமிழினம் சர்வதேசத்தையே பலமாய் நம்புகிறது.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் முக்கியஸ்தரும் ஆர்.ஆர் என்று அனைவராலும் அழைக்கப்படுபவருமாகிய வேலாயுதம் நல்லநாதர் அவர்கள் காலமாகிவிட்டார். 2015 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட போது அதற்குத் தனது ஆதரவினை வழங்கியிருந்த ஆர்.ஆர் தமிழ் மக்கள் பேரவையின் உறுப்பினராகவும் இருந்தவர். அவருக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, வட மாகாணத்திலுள்ள தென்னை மரங்களில பரவியுள்ள வெள்ளை ஈக்களால எங்கட தென்னை வளம் முற்று முழுதாக அழியப் போகிறது. இதைத் தடுக்கிறதுக்கு ஏதாவது செய்தாக வேணும்.

**மூப்பர்:-** விதானையார், எங்கட தென்னை மரங்களை அழித்துக் கொண்டிருக்கின்ற தென்னை ஈ பற்றி நாங்கள் தான் அழுது புலம்புகிறம். ஆனால் வடக்கு மாகாண ஆளுநர் இது விடயத்தில ஒரு விசேட கலந்துரையாடலை நடத்தி வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த அதிரடி நடவடிக்கை எடுக்க வேணும் அல்லோ.

**சாத்திரியார்:-** வட மாகாணத்திலுள்ள தென்னை மரங்களில வெள்ளை ஈத்தாக்கம் இருக்கிறது கூட எங்கட பெரியவையளுக்கு தெரியுமோ தெரியல்ல.

**சிறாப்பர்:-** ஏன்? எங்கட தமிழ் அரசியல் வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர்களும் இது விடயத்தில கவனம் செலுத்தலாம் தானே.

**வாத்தியார்:-** அதெண்டால் உண்மைதான். ஆனால் வீட்டிற்கு இரண்டு தென்னை நடுவோம் என்ற மகுட வாசகத்துடன் தென்னங்கன்றுகள் கொடுத்த நிறுவனங்கள் இப்ப எங்க போயிற்றினம் எண்டு தெரியல. தென்னை வையுங்க என்று சொன்னவர்களை இப்ப தேடவேண்டிக் கிடக்குது?

**விதானையார்:-** யாழ்ப்பாணத்தில பெரும்பாலான தென்னை மரங்கள் வெள்ளை ஈயின்ர தாக்கத்தால கெட்டு நொந்து போயுள்ளன.

இன்னும் இரண்டு மாதங்களில பட்ட தென்னைகளைத் தறிக்கிற வேலையில தான் நம்மவியள் ஈடுபடுவினம்.

**சாத்திரியார்:-** அது சரி, தனியார் பஸ் சாரதிகளைக் கவனிக்க இஞ்ச ஆக்களில்ல போல.

**மூப்பர்:-** ஏன் சாத்திரியார் அப்படி சொல்லுறியள்.

**சாத்திரியார்:-** அண்மையில அல்லைப்பிட்டிப் பகுதியில தனியார் பஸ்ஸில பயணம் செய்த பெண் ஒருவர் இறங்கப் போற நேரத்தில பஸ்ஸை சடுதியாக நிப்பாட்ட, அந்தப் பெண் கீழே விழுந்து இறந்துபோன பரிதாபச் சம்பவம் ஒன்று நடந்ததல்லோ.

மண்கும்பானைச் சேர்ந்த அந்தக் குடும்பப் பெண்ணுக்கு சின்னப் பிள்ளைகள் இருக்கினம்.

தாயின்ர மரணச் சடங்கின்போது அந்தப் பிள்ளைகள் கண்ணீர் விட்டு அழுத பரிதாபத்தைக் கண்டு இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அத்தனைபேரும் கண்ணீர் விட்டினம். அந்த பஸ் சாரதி கொஞ்சமாவது மனித நேயத்தோட நடந்திருந்தால், அந்த சின்னப்பிள்ளைகள் தங்கட தாயை இழந்து பரிதவிக்கின்ற நிலைமை வந்திருக்காது.

**கங்காணி:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். குறித்த விபத்து நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்பாக, வேலணைப் பகுதியில குறித்த பஸ் சாரதி ஒரு பசு மாட்டை பஸ்ஸால அடித்து சாக்காட்டினதாகவும் இதற்கு முன்பும் மிக மோசமான விபத்துக்களை குறித்த சாரதி ஏற்படுத்தியுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் கதைக்கினம்.

**பண்டிதர்:-** உது தான் இஞ்ச நடக்குது. விபத்துக்களை ஏற்படுத்துகிறவர்கள் பொலிஸாருக்கு லஞ்சத்தைக் கொடுத்து தப்பிக் கொள்கிறார்கள்.

அதன் பிறகு விபத்து ஏற்பட்டால், பொலிஸாருக்கு லஞ்சம் கொடுத்து தப்பிவிடலாம் என்ற மனநிலை அவர்களுக்கு ஏற்பட்டுவிடும்.

அந்த விளைவு தான். அப்பாவிப் பெண் ஒருவர் பரிதாபகரமாக பலியாகிறதுக்கு காரணம்.

**சிறாப்பர்:-** அது மட்டுமல்ல பண்டிதர் ஐயா, தனியார் பஸ் சேவையில பயணிகளின்ர நலன்கள் அறவே பேணப்படுவதில்லை எண்ட குற்றச்சாட்டும் பரவலாக இருக்குது.

அதிகளவில் பயணிகளை ஏற்றுவது, பின்னர் அவர்களைக் கண்டபாட்டில் ஏசுறது, இறங்கும் போது தள்ளி விடுவது எண்ட அநியாயங்கள் நடக்குதாம்.

இருந்தும் அப்பாவிப் பயணிகள் எல்லாத் துன்பங்களையும் சுமந்து கொண்டு மௌனமாக இருக்கினம்.

**சாத்திரியார்:-** ஓ! இப்ப வட மாகாணத்தில எல்லாரும் தாம் தாம் நினைத்தபடி நடக்கினம்.


எதிரிகளைத் தாக்க வேணும் எண்டால் கூலிப்படையை ஏவி விடலாம், செய்த குற்றத்தில இருந்து தப்பிக் கொள்ள பொலிஸாரை வளைக்கலாம், உரிமையில்லாத காணிகளை விற்க வேணும் எண்டால் அதற்கும் ஆட்கள் இருக்கினம். இப்படியே எங்கட வட புலம் கந்தறுந்து காவடி எடுக்குது.

**வாத்தியார்:-** இதுகளைக் கவனிக்க இஞ்ச ஒருத்தரும் இல்லை. ஆக, சாராயக்கடைகளைக் கட்டுறதுக்குத் தான் இப்ப வடக்கில பெரும் மவுசு. எந்த இடத்திலும் சாராயக் கடை கட்ட அனுமதியளிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் தயாராக இருக்கினம்.

**கங்காணி:-** பிறகென்ன பணம் பாதாளம் மட்டும் பாயுது. எங்களைப் போன்ற அப்பாவிகள் தான் வாழ முடியாமல் கஷ்டப்படப் போகிறம்.


இப்படி கங்காணி கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**



**வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேணும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம் நாட்டு மக்கள் பலர் பட்டினி கிடக்கின்றனர், வீடு இன்றி வீதியில் கிடக்கின்றனர். அதை விட்டு விட்டு அயல் நாட்டுக்கு வீடு கட்டிக் கொடுப்பதன் நோக்கம் என்ன வியாசரே?

**சுதன் குப்பிழான்**

**புதையல் தோண்டக் கிடைக்கிறதே இல்லை. புதைகுழி தோண்டத் தோண்டக் கிடைக்கிறதே?**

தமிழர் வாழ்ந்த பூமி ஒரு காலத்தில் புதையல் நிறைந்த பூமியே. மண் வளம், மழை வளம், நீர் வளம் என எம் மண் புதையல் பூமியாகவே இருந்தது.

என்ன சொல்வது கொடிய போர் எம் மண்ணை புதைகுழி பூமியாக மாற்றி விட்டது.

மண்ணுக்குள் புதையுண்டு இருப்பவர்கள் வேறு யாரும் இல்லை. எம் சொந்தங்களே. இந்த மண்ணை நேசித்த எம் சொந்தங்கள் மண்ணுக்குள் மௌனித்துக்கிடக்கின்றனர். அவ்வளவே.

**மதுவன் மீசாலை**

**தமிழரசுக் கட்சியை காப்பாற்ற முடியாதா வியாசரே?**

தந்தை செல்வா போன்ற தலைவரை இனி ஒரு போதும் தமிழினம் காணப் போவதில்லை. அவ்வளவுக்கு அவர் தமிழினத்தின் மீதும் அவர்கள் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் நெஞ்சுரத்துடன் செயற்பட்டார்.

அப்பேற்பட்ட தலைவர் தமிழினத்தைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று மனமுருகி கூறினார்.

ஆனால் இன்றைய நிலை வேறு மாதிரியல்லவா இருக்கிறது.

தமிழினத்தைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்னும் நிலை மாறி தமிழரசுக் கட்சியைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற நிலையே தற்போது இருக்கிறது.

**விஜயதரன் உரும்பிராய்**

**தமிழரசுக் கட்சியின் குழப்ப நிலைக்கு பின்னணி என்ன வியாசரே?**

என்ன காரணம் என்று என்னைக் கேட்பதை விட சிறுபிள்ளையைக் கேட்டால் கூட சொல்லும் "பதவி ஆசை" என்று.

என்ன செய்வது தமிழரின் ஒற்றுமையின் சின்னமாய் விளங்கிய கூட்டமைப்பை உடைத்தார்கள்.

அட நாம் நினைத்தது நடந்து விட்டது என்ற உற்சாகத்தில் தலைமைப் பதவியைக் குறி வைத்தார்கள். அதுவும் தவறிப் போக வேறு சில பதவிகளுக்கு தூண்டில் போட்டார்கள்.

அதுவும் நழுவிவிட இனி வழக்கை விட வேறு இல்லை என்று அற்ப காரணம் கண்டு அதற்கொரு வழக்கு.




**அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய
கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்**

**டனுஷாந் திருநெல்வேலி**

**தமிழர் மாநாடு நடத்துவதற்கு நீதிமன்ற தடை விதிக்கப்பட்டுள்ளது. மாநாடு நடக்குமா நடக்காதா வியாசரே?**

தமிழரசுக் கட்சியின் மாநாடு நடைபெறும் என அறிவித்தல் விடுத்த அடுத்த சில நாட்களிலேயே அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றை நாடியது வேறு யாருமல்ல தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் என்பது தான் வேடிக்கையான விடயம்.

கட்சியில் பதவிக்கு ஆசைப்பட்ட சிலரின் தூண்டுதல் அதில் பலமாக இருப்பதாக கட்சி வட்டாரத்துக்குள்ளும் வெளியேயும் அரசல்புரசலாக கதை கசிய, முந்திரியாய் முந்திய சிலர் வேறு மாதிரி அறிக்கையிட்டனர்.

நாம் கேட்டது போல பதவி தந்தால் கேசை வாபஸ் வாங்குவோம் என்கிறார்களாம்.

அப்படியென்றால் சட்ட நடவடிக்கை விதி மீறலுக்கானதல்ல பதவிக்கானதே என்பது தானே பொருள்.



தமிழரசுக் கட்சியை காப்பாற்ற முடியா தா வியாசரே?

**சிவயோகன் புளியங்குளம்**

**தம் நாட்டு மக்கள் பலர் பட்டினி கிடக்கின்றனர், வீடு இன்றி வீதியில் கிடக்கின்றனர். அதை விட்டு விட்டு அயல் நாட்டுக்கு வீடு கட்டிக் கொடுப்பதன் நோக்கம் என்ன வியாசரே?**

எலும்பில்லாத நாக்கினால் எதையும் பேசி விடலாம்.

ஒருவர் எமக்கு உதவி செய்கின்றார் என்றால் அவரின் நதி மூலம், ரிஷிமூலம் பாராமல் அவரின் உதவி பற்றியே சிந்திக்க வேண்டும்.

அரசியல் தளத்தில் தமது நாட்டு பாதுகாப்பு பற்றி சிந்திப்பதில் சற்றும் தவறில்லையே.

அவர்களின் வீட்டுத்திட்டத்தில் பயன் பெற்றவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டால் நிச்சயம் மனம் வருந்துவார்கள்.

நாம் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் சிவயோகன்.

அதாவது, ஒருவர் நமக்கு செய்யும் உதவியை நன்றியுடன் பார்ப்பதே அது.

**மகாலட்சுமி கொக்குவில்**

**புத்தி, அறிவு இரண்டுக்குமுள்ள வேறுபாடு என்ன வியாசரே?**

புத்தி என்பது மனிதனின் நடத்தை சம்பந்தப்பட்டது. உதாரணத்திற்கு ஒரு இடத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை எமக்கு கற்றுத் தரவல்லது.

அறிவு என்பது கற்றல் தொடர்பானதும் அனுபவரீதியாகவும் இருக்கும்.

அதாவது ஒருவர் நம்மை தாக்க வருகிறார். அவரிடம் இருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது என்பது புத்தி சம்பந்தப்பட்டது.

நாம் படித்த பாடத்தில் அல்லது செய்யும் வேலைகளில் எழும் கேள்விக்கு பதில் தரக் கூடியது அறிவு சம்பந்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : ஆனந்த ஜோதி
இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி
பாடகர் : ரி.எம்.சௌந்தர்ராஜன்



பனி இல்லாத மார்கழியா
படை இல்லாத மன்னவரா
இனிப்பில்லாத முக்கனியா
இசை இல்லாத முத்தமிழா
பனி இல்லாத மார்கழியா
படை இல்லாத மன்னவரா

அழகில்லாத ஓவியமா
ஆசை இல்லாத பெண் மனமா
அழகில்லாத ஓவியமா
ஆசை இல்லாத பெண் மனமா
மழை இல்லாத மாவிலமா
மலர் இல்லாத பூங்கொடியா
மலர் இல்லாத பூங்கொடியா

பனி இல்லாத மார்கழியா
படை இல்லாத மன்னவரா...

தலைவன் இல்லாத காவியமா
டகலைவி இல்லாத காரியமா
தலைவன் இல்லாத காவியமா
டகலைவி இல்லாத காரியமா
கலை இல்லாத நாடகமா
காதல் இல்லாத வாலிபமா
காதல் இல்லாத வாலிபமா

பனி இல்லாத மார்கழியா
படை இல்லாத மன்னவரா..

நிலை இல்லாது ஓடுவதும்
நினைவில்லாமல் பாடுவதும்
பகைவர் போலே பேசுவதும்
பருவம் செய்யும் கதை அல்லவா
பருவம் செய்யும் கதை அல்லவா

பனி இல்லாத மார்கழியா
படை இல்லாத மன்னவரா
இனிப்பில்லாத முக்கனியா
இசை இல்லாத முத்தமிழா

# பிள்ளைகளின் உள நல மேம்பாட்டில் பெற்றோரின் பங்கு

**“பிள்ளைகளுக்கு நல்ல நண்பர்களாக இருங்கள். அவர்களை அவர்களது சகோதர, சகோதரிகளுடன் ஒப்பிடாதிருங்கள். பிள்ளைகள் தவறும் சிறிய விடயங்களில் கூட கேலி செய்யாதிருங்கள். ஒவ்வொரு நாளும் பத்து நிமிடங்களாவது ஒதுக்கி தொலைபேசி, தொலைக்காட்சி, உறவினர் என்ற இடையூறுகள் எதுவுமின்றி அந்த நாள் பற்றி உரையாடுங்கள்.”**

பிள்ளை வளர்ப்பு என்பது ஒரு கலை. அவசரமாக ஓடிக்கொண்டிருக்கும் உலகில் பெற்றோர்கள் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு வேலைக்குச் செல்ல வேண்டியிருப்பதால் நேரமின்மையாலும் பொறுமையின்மையாலும் பிள்ளைகளுக்கான அன்பும் பாசமும் முழுமையாக கிடைப்பதில்லை. இன்றைய சிறுவர்களே நாளைய உலகைக் கட்டியெழுப்பும் பொறுப்பைப் பெற்றுள்ளனர். ஆகையினால் சிறுவர்களது விருத்தி சிறந்த முறையில் முன்னேற்றம் காண உதவுவதில் பெற்றோரின் பங்கு இன்றியமையாததாக காணப்படுகின்றது.

உளநலன் என்பது உளநோய்கள் அற்ற நிலையை மாத்திரம் குறிப்பதல்ல. ஒருவர் சூழலுடன் இணைந்து வாழ்வதற்குத் தேவையான ஆளுமைக் கூறுகள், வாழ்க்கைத்திறன்கள், உறவாடல் திறன்கள், முடிவெடுத்தல் திறன்கள் மற்றும் அவரது பண்புக்கூறுகள் முதலிய பல அம்சங்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு தனியனும் உடல் நலத்தோடு வாழவேண்டியது எந்தளவுக்கு முக்கியமானதோ அதேயளவுக்கு உளநலத்தோடும் வாழவேண்டியதும் முக்கியமாகும். பிள்ளைகளின் உடல் நலனில் அக்கறை செலுத்தும் பெற்றோர் அவர்களது உளநலனில் கவனம் செலுத்தத் தவறிவிடுகின்றனர்.

குடும்பத்தில் பெற்றோரிடையேயான சண்டைகள், தவறான வார்த்தைப் பிரயோகங்கள், பிள்ளைகளுக்கு அதிக செல்லம் கொடுத்தல், கடுமையாகத் தண்டித்தல், பிள்ளைகளோடு நேரம் செலவிட்டு உரையாடாமை, பிள்ளைகளின் தேவைகளை அறியாதிருப்பதும் அவற்றை நிறைவேற்றாதிருப்பதும், காரணமில்லாமல் பிள்ளைகளில் கோபப்படுதல், பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பை ஏனையோரிடம் கையளித்தல், பிள்ளைகளை அடித்தல், மிரட்டுதல், உணர்ச்சிவசப்பட்டு கதைத்தல் முதலிய செயற்பாடுகளால் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமான இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் பிள்ளைகள் உள ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இதன் விளைவாக பிள்ளைகள் பயங்கரமான கனவுகளைக்காணுதல், வன்போக்குடன் செயற்படல், நித்திரைக் குழப்பம், அதீத பசி, பசியின்மை, ஒதுங்கியிருத்தல், காரணமின்றி அழுதல், பயப்படல், படுக்கையை நனைத்தல், தம் நாளாந்த வேலைகளை மறத்தல், பாதுகாப்பின்மையை உணருதல், அறிகைச் செயற்திறன் குறைதல், உடலியற் பிரச்சினைகள், வாழ்க்கை குறித்த எதிர்மறைப் பார்வை, போதைப்பொருட்பாவனை முதலிய பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

பெற்றோரின் சண்டைகள் சிறு குழந்தைகளை மட்டுமன்றி கட்டிளமைப் பருவப்பிள்ளைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இதனால் பிற்காலத்தில் அவர்களது திருமண வாழ்க்கையிலும் பாதிப்புக்கள் ஏற்படலாம். திருமண பந்தத்தில் இணையும் கணவன், மனைவி இருவரும் பெற்றோர் என்ற நிலையை அடையும் போதே பிள்ளை வளர்ப்பு தொடர்பாகவும் பெற்றோர் பிள்ளை இணைப்பு தொடர்பாகவும் பிள்ளைகளது உடல் நலனோடு உளநலனை மேம்படுத்துவதற்கு கையாள வேண்டிய நுட்பங்கள் தொடர்பாகவும் அறிந்திருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளது உளநலத்தேவைகளைக் கருத்திற்கொள்ள வேண்டும். பிள்ளைகளது அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றல், குடும்பச்சூழலை அன்பும், ஆதரவும், ஒற்றுமையும் நிறைந்ததாக வைத்திருத்தல், பிள்ளைகளுக்கு சிறந்த முன்மாதிரிகளாகச் செயற்படல் வேண்டும்.

குடும்ப அமைப்பினுள்ளேயே ஒவ்வொரு பிள்ளைகளது நடத்தைகளும் கற்றல் செயற்பாடுகளும் ஆரம்பிக்கின்றன என்பதை ஒவ்வொரு பெற்றோரும் அறிந்திடல் வேண்டும். பெற்றோருடன் இணக்கமான உறவுநிலையில் இருக்கும் பிள்ளைகள் ஏனையோருடன் சிறந்த தொடர்பை பேணுபவர்களாகவும், தம் மன அழுத்தத்தை முறையாகக் கையாளக்கூடியவர்களாகவும், அறிவாற்றல் மிகுந்தவர்களாகவும், வாழ்க்கைத்திறன்கள் மற்றும் சமூக மதிப்பீடுகளை கற்றுக்கொள்ளக் கூடியவர்களாகவும் காணப்படுவர்.

எனவே ஒவ்வொரு பெற்றோரும் உங்கள் பிள்ளைகள் பாடசாலை செல்லவோ, உணவு உட்கொள்ளவோ மறுக்கும் போது காரணம் என்ன என்பதைக் கேட்டு தெளிவுபடுத்துங்கள். பிள்ளைகளுக்கு நல்ல நண்பர்களாக இருங்கள். அவர்களை அவர்களது சகோதர, சகோதரிகளுடன் ஒப்பிடாதிருங்கள், பிள்ளைகள் தவறும் சிறிய விடயங்களில் கூட கேலி செய்யாதிருங்கள், ஒவ்வொரு நாளும் பத்து நிமிடங்களாவது ஒதுக்கி தொலைபேசி, தொலைக்காட்சி, உறவினர் என்ற இடையூறுகள் எதுவுமின்றி அந்த நாள் பற்றி உரையாடுங்கள்.

சமூக ஊடகங்களில் நல்ல விடயங்களைப் பார்க்கவும் தங்கள் சுய மதிப்பீடு, சுய ஊக்குவிப்பை வளர்க்கவும், தாம் செய்யும் விடயங்கள் சரியா? பிழையா? என்பதை அவர்களாகவே எண்ணிப்பார்க்கக் கற்றுக்கொடுங்கள். பிள்ளைகள் பேசுவதை காதுகொடுத்து கேளுங்கள். ஒரு வேளையாவது பிள்ளைகளுடன் சேர்ந்து சாப்பிடுங்கள். பிள்ளைகளோடு கண் பார்த்து பேசுங்கள. முகம் மலர உரையாடுங்கள். புன்னகையோடு அணுகுங்கள். அத்தோடு அவர்களது நல்ல விடயங்களைப் பாராட்டுங்கள். நம் பிள்ளைகள் தானே என உரிமை எடுத்துக் கொள்ளாது அவர்களை அன்போடும் மரியாதையோடும் நடத்த வேண்டியது ஒவ்வொரு பெற்றோரதும் கடமையாகும்.

**செல்வி சுவேந்திரன் கிருந்திகா
உளவியற்துறை மாணவி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய எதிர்க்கட்சி தலைவரின் மர்ம மரணம் - புடினின் சதியா?

**"சாகும்வரை தானே ஜனாதிபதி எனச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வந்து எதிர்க்கட்சிகளைத் தொடர்ந்து ஒடுக்கிவரும் புடினின் சர்வாதிகாரம் நீண்டநாள் நிலைக்காது" என்கிறார்கள் நாவல்னியின் ஆதரவாளர்கள்!**



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினைக் கடுமையாக விமர்சித்தவரும் ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவருமான நாவல்னி சிறையில் மர்மமான முறையில் உயிரிழந்திருப்பது சர்வதேச அரசியலில் அதிர்வை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ரஷ்யாவின் ஆட்சியாளர்கள்மீது ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி கடுமையாக விமர்சித்து வந்தவர் நாவல்னி. இதற்காக ஊழல் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை நிறுவியவர். புடினை விமர்சித்து தொடர்ந்து பல வீடியோக்களையும் வெளியிட்டார். மிகக் குறுகிய காலத்தில் பிரபலமான நாவல்னி `Russia Of The Future' என்ற கட்சியை நிறுவினார்.

2018இல் ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் புடினை எதிர்த்து போட்டியிட முயன்ற நாவல்னி மீது பண மோசடி வழக்கு பாய்ந்தது. அதனால் தேர்தலில் போட்டியிட நாவல்னிக்குத் தடைவிதிக்கப்பட்டது.

இந்த நிலையில் 2020ஆம் ஆண்டு, விமான நிலையத்தில் டீ குடித்துவிட்டு விமானம் ஏறிய நாவல்னி சில மணி நேரத்தில் நிலைகுலைந்தார். அவர் குடித்த டீயில் நரம்பு மண்டலத்தை பாதித்து உயிரைப் பறிக்கும் கொடிய விஷம் கலக்கப்பட்டது பின்னர் தெரியவந்தது.

ஜேர்மனியில் அளிக்கப்பட்ட தீவிர சிகிச்சையால் உயிர் பிழைத்த நாவல்னி 'இந்தச் சதிக்குப் பின்னால் இருப்பது புடின்தான்' என்று குற்றம்சாட்டினார்.

2021 ஜனவரியில் ஜேர்மனியிலிருந்து நாடு திரும்பி நாவல்னியை விமான நிலையத்திலேயே வைத்துக் கைது செய்தது ரஷ்ய காவல்துறை. பண மோசடி வழக்கு உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காக அவருக்கு 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது மொஸ்கோ நீதிமன்றம். ரஷ்யாவின் கொடூரமான சிறைகளில் ஒன்றான ஆர்க்டிக் சர்க்கிள் சிறையிலடைக்கப்பட்டார் நாவல்னி. அங்கு தனக்கு முறையாக உணவும் மருந்தும் கிடைக்கவில்லை என சில நாட்கள் உண்ணாவிரதப் போராட்டமும் நடத்தினார்.

இந்த நிலையில் கடந்த பெப்ரவரி 16ஆம் திகதியன்று "நாவல்னி சுயநினைவை இழந்து இறந்துவிட்டார். அவரது மரணத்துக்கான காரணம் ஆய்வுசெய்யப்பட்டுவருகிறது" எனத் தெரிவித்திருக்கிறது சிறை நிர்வாகம்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனோ "புடினும் அவரது குண்டர்களும்தான் நாவல்னியின் மரணத்துக்குக் காரணம்" என்றிருக்கிறார்.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ "புடின் எவ்வளவு பெரிய மான்ஸ்டர் என்பதை இந்தச் சம்பவம் காட்டுகிறது" என்கிறார். நாவல்னி சிறைக்குச் சென்றதற்குக் காரணமே 'அரசியல் சதிதான்' எனப் பல்வேறு நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் தெரிவிக்கின்றன.

"சாகும்வரை தானே ஜனாதிபதி எனச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவந்து எதிர்க்கட்சிகளைத் தொடர்ந்து ஒடுக்கிவரும் புடினின் சர்வாதிகாரம் நீண்ட நாள் நிலைக்காது' என்கிறார்கள் நாவல்னியின் ஆதரவாளர்கள்.

"இனிமேல் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களில் ஓடும் வாகனங்கள் நம் நாட்டில் நுழையத்தடை செய்யப்படும். வெறும் எலக்ரிக் வாகனங்களுக்கு மட்டும்தான் நம் நாட்டில் நுழைய அனுமதி " என்று எத்தியோப்பிய அரசின் மத்திய போக்குவரத்துத்துறை அமைச்சகம் அறிவித்துவிட்டது.

தற்போது நிதி நெருக்கடியைச் சந்தித்து வரும் எத்தியோப்பியா அந்நியச் செலாவணியைக் குறைக்கவும் மாசு ஏற்படுதலைப் பெரிதாகத் தவிர்க்கவும் இப்படிப்பட்ட முடிவை எடுத்ததாகச் சொல்லியிருக்கிறார் போக்குவரத்து மற்றும் லாஜிஸ்டிக்ஸின் எத்தியோப்பிய மத்திய அமைச்சர் Alemu Sime.

Green Transport எனும் இயற்கைக்கு நண்பனான பசுமைப் போக்குவரத்துதான் மாசுக்குறைபாட்டைத் தவிர்க்கவும், நிதி நெருக்கடியைச் சமாளிக்கவும் இருக்கும் ஒரே தீர்வு என்று எத்தியோப்பியப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தப் புது பாலிசியை அவர் அறிவித்திருக்கிறார்.

இந்தப் புதிய பாலிசியில், பெற்றோல் மற்றும் டீசலில் ஓடும் ICE (Internal Combustion Engine) வாகனங்களை இறக்குமதி செய்து ஓட்டுவதற்கு முழுத்தடை இல்லை ஆனால் லிமிடேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. காரணம் வழக்கம்போல் எலக்ரிக் வாகனங்களின் தொட முடியாத விலைதான். எத்தியோப்பிய மக்கள் எல்லோரும் எலக்ரிக் வாகனங்களை வாங்கிவிடும் நிலையில் இல்லை.

அமைச்சர் Alemu Sime, "கூடவே எத்தியோப்பிய அரசாங்கம், கூடுதலாக ஃபாஸ்ட் சார்ஜிங் ஸ்டேஷன்களை நிறுவுவது பற்றியும் முடிவெடுத்திருக்கிறது. எத்தியோப்பியா Green Transportation இற்குப் போராடி வரும் நாடு. இதன் காரணமாக மின்சாரம் நம் நாட்டிலேயே தயாரிக்கப்படும். மேலும் இது பெற்றோல், டீசல் எரிபொருட்களைவிட மிகவும் விலை குறைந்தும் கிடைக்கும்!" என்றும் சொல்லியிருக்கிறார்.

மற்ற நாடுகளைப்போல் எத்தியோப்பியாவும் எலக்ரிக் வாகனங்களை வாங்க ஊக்குவித்து வரும் நாடுதான். அதற்காகவே ஒரு பத்தாண்டுத் திட்டம் ஒன்றை லேட்டஸ்ட்டாக அறிவித்து

***"யாரு பூனைக்கு மணி கட்டப் போறாங்க" என்கிற போட்டியில் முதலில் மணியைக் கட்டத் தொடங்கிவிட்டது எத்தியோப்பியா எனும் நாடு. தெற்கு ஆபிரிக்கா கண்டத்தில் இருக்கும் எத்தியோப் பியாவில் பெற்றோல், டீசல் கார்களுக்குத் தடை விதித்துவிட்டார்கள்.***

# பெற்றோல், டீசல் வாகனங்களுக்கு தடை விதித்த முதல் நாடு

அதன் மூலமாக 2022 இல் சுமார் 4,800 எலெக்ட்ரிக் பேருந்துகளையும், 1.48 லட்சம் எலக்ரிக் கார்களையும் இறக்குமதி செய்திருந்தது எத்தியோப்பியா. மேலும் Energy Infrastructure எனும் ஏரியாவில் பெரிய முதலீட்டாளராக இந்த நாடு திகழ்கிறது. ஆபிரிக்காவின் மிகப்பெரிய ஹைட்ரோ எலக்ரிக் பவர் ப்ளான்ட்டை மிக விரைவில் திறக்க இருக்கிறது எத்தியோப்பியா. The Grand Ethiopian Renaissance Dam (GERD) மூலம் சுமார் 6,000 மெகாவாட் அளவு மின்சாரத்தை ஜெனரேட் செய்யும் என்றும், முதற்கட்டமாக 3,000 மெகாவாட் அளவு தயாரிக்கப் போகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இப்போதைக்கு இந்த பெற்றோல் / டீசல் தடா என்பது நிரந்தரமா அல்லது இடைக்காலத் தடையா என்பதும் தெரியவில்லை. காரணம் ஏற்கெனவே ஓடிக் கொண்டிருக்கும் ICE இன்ஜின் கார்களின் நிலைமை இதனால் பெரிதும் பாதிக்கப்படும் என்பதால்.

எத்தியோப்பியாவில் ஹூண்டாய், இசுசு, ஃபோக்ஸ்வாகன், டடா போன்ற பெரிய ஜாம்பவான் நிறுவனங்கள் தொழிற்சாலை வைத்து கார்களை உற்பத்தி செய்துவருகின்றன. இதில் ICE கார்கள் தவிர எலக்ரிக் வாகனங்களும் அடங்கும். இந்த அறிக்கையால் உள்நாட்டில் கச்சா எண்ணெய் இறக்குமதியையும் பாதிக்கும் என்கிறார்கள். இப்போதைக்கு ஓர் ஆண்டுக்கு சுமார் 6 பில்லியன் டொலர் அளவில் இந்திய மதிப்பில் சுமார் 49,800 கோடி ரூபாய்க்குக் கச்சா எண்ணெய் இறக்குமதி நடந்து கொண்டிருக்கிறதாம். இது பெரியளவில் பாதிக்கப்படும். இதைத் தாண்டி நம் இந்தியாவும் ஆபிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவரும் வாகனங்களின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறையும்.

செகண்ட் ஹேண்ட் பெற்றோல்/டீசல் கார்களின் மார்க்கெட்டுக்கு இந்தத் தடை உண்டா மேலும் இந்த பெற்றோல்/டீசல் தடை எப்போதிலிருந்து அமுலுக்கு வரும் என்பதும் இன்னும் அறிக்கையில் தெளிவாக விளக்கப்படவில்லை.

ஆனால் இதைத் தொடக்கி வைத்து உலகைத் திரும்பிப் பார்க்க வைத்துவிட்டது எத்தியோப்பியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## உன் புகழ் பேசும்

உண்மையை அறிந்திட்டேன்
உன் ஒரு சிறிய புன்னகையில்
பணம் தான் வாழ்க்கையெனும்
பல பேர் மத்தியிலும்
உலகையே வென்று விட்டாய்
உன் உன்னத சேவையினிலே
இன்னும் ஏதோ ஒன்றை புரியாமல்
என் இதழ் சொல்ல உளறுகின்றேன்

ஆ.லக்ஷ்மி, வவுனியா.

## தீராத துவனி

வனமும் வயலும் வாழ்வும்
சிறந்து செழித்துச் சிலிர்த்ததே
கணத்தில் உறக்கம் களைத்து எதுவும்
கனத்தும் இல்லையே
உணர்த்தும் வாழ்வு உயர்வு கண்டு
உலகம் வியந்ததே
துணைச் சாய்க்க துரும்பு சிலது
துரோகம் விதைத்ததே
நாணம் கெட்டு நன்றி மறந்து
எம் நயப்புடைந்ததே
கூனிக் குறுகி கொத்துக் கொத்தாய்
உயிர்கள் சாய்ந்ததே
கொண்ட கொள்கை குபேரமாக்க
கண்டம் அலைந்ததே
அண்பபுழுகும் அரையும் காலும்
தலையும் வைத்ததே
கொட்டிக் கொடுத்தும்
கட்டி அணைத்தும் உலக
பூதம் காத்ததே
குப்பி விளக்கும் குடிசை வாழ்வும்
சூடு கலைந்ததே
அப்பு ஆச்சி ஆண்ட தேசம்
அழிந்தே போனதே
ஆளுக்காளாய் துணையுமின்றி
அரைவாசி வந்தோமே
பல ஆண்டு போயும் துவனி வாழ்வு
எம் அவனி காணலையே!

சி.சிதி,
பசவூர் வேலங்காட்டான்.

## பள்ளியின் நாட்கள்

பட்டினி மறந்திடும் பள்ளிப் பருவத்தில்
கடந்திடும் நினைவுகள் எத்தனை என்றவோ!
உலகினை வென்றிடும் உத்தமர் அனைவரும்
வேண்டிடும் நினைவுகள் பள்ளியின் நாட்களே
வாழ்வினை வரைந்திடும் நட்பினை தந்திடும்
இப்பெரும் ஆலயம் உலகினில் ஒன்றுற
எம்மவர் நினைவுகள் உணர்த்திடும் உலகினில்
குழிகளில் கற்ற பள்ளியின் நினைவினை
செவிகளை சிதைக்கும் வெடி ஒலி விரைந்திட
உலகினில் சிறக்க கல்வியை பயின்றிட
ரவைகள் துளைத்த துளைகளை எண்ணி
கற்ற கல்வியில் தடைகளை கடந்திட
நீங்கா நினைவுகள் நிறைந்திடும் மனதுடன்
கடந்திடும் பயணம் எத்தனை என்றதுவா

த. கிருஷ...

## மௌனத்தின் தேடல்-704



## மனித தெய்வம்

இந்தச் சருகுக்குள்
எத்தனை ஈரம்
அறச்சாலைகள்
அநாதை விடுதிகள்
முதியோர் இல்லங்கள்
இலவச வைத்தியம்
சிறுவர் பராமரிப்பு
இன்னும் எத்தனை
அறப்பணிகள் ஆற்றிய
அன்னை திரேசா
ஒரு மனித தெய்வம்



பி.யதுர்சனி,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## அன்னையின் கை

காலத்தின் நிர்ணயத்தினால்
உறவுகள் பிரிக்கப்பட்டன
சதிகள் புனைக்கப்பட்டன
உண்மைகள் ஊமையாக்கப்பட்டன
பிள்ளையின் மனம்
பரிதவித்து
அன்புக்கு ஏங்கித் தவித்த
குழந்தையை
தாங்கிப் பிடித்தது
அன்னையின் கை...

ச.அகல்யா
சண்டிலிப்பாய்

## அன்னை வழியில் தெய்வம்

யாருமற்ற சிறுவனை அணைத்து
மகிழ்ந்து பேருவகை கொள்ளும்
மாபெரும் அன்னையாம் திரேசா
அம்மையாரே என் கவியால்
துதிக்கிறேன்
ஒரு சிறுவனல்ல அகில உலகெங்கும்
வாழும் அநாதைச்
செல்வங்களைத் தாங்கிக் கொள்கிறார்
தெய்வமாகிய அன்னை
திரேசா பெற்ற தாயிலும் மேலாக
பெரிது கருணை காட்டும் தாயே
வணங்குகிறேன்

அபிஇலம்பரிகா, சித்தன்கேணி.

## இவர்களை மன்னியும்

விளம்பர அரசியல்
வியாபார ஊடகங்கள்
நாளாந்தம் புரவலர்
படங்கள் பிரசுரம்
கோயில் மாடத்திலும்
உபயகாரர் பெயர்
விளம்பரத்தை விரும்பாத
திரேசா அம்மையே
இவர்களை மன்னியும்

பி.நதுஷ்சனி தையிட்டி

## கருணைத் தாய்

கருணை பொழியும் முகமதனில்
மாறாத புன்னகை ததும்ப
கள்ளமில்லா மேலான பிரிவுடன் தன்னுயிர்
போல் மன்னுயிரையும்
மதித்து அன்புடன் அரவணைத்துதுன்பம்
துயர் போக்கி
வாழ வழிகாட்டிய தன்னிகரில்லாத்
தனிப் பெரும்
தாயிவள் இப்பூவுலகில் மறைந்தும்
மறையா ஒரு மாங்கா மணிச் சுடரே


சி.மகரஜட்டிகா, கொக்குவில்.

## உலக மாதா

மனித நேயங்கள் மறைந்திடும் வேளையில்
மனிதாபிமானத்திற்கு ஓர் ஆலயமாகத் தோன்றியவர்
அன்னை திரேசா மழலைகளின் சிரிப்பில்
மகிழ்ந்திடும் மாதா மெழுகுவர்த்தியாய் உருகி மேதினியில்
ஒளியேற்றிய விளக்கு அன்பிற்கு இலக்கணமாய்
அகிலம் போற்றும் அகல்விளக்கு

ஆ.செல்வி, திருநாவலூர்.

## மௌனத்தின் தேடல்- 705




... உங்கள் மனதில் தோன்றும் கவிதை, ... பதில்களை
... மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
... பிரவுன் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை

அன்பு வாசகர்களே!

நீண்டவரலாற்றைக்கொண்ட யாழ்ப்பாணம் கோட்டை வரலாற்றை பல்வேறு தரப்பினர் ஆய்வின் ஊடாக பதிவிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் எழுத்தாளர் செங்கை ஆழியான் எழுதிய "களம் பல கண்ட யாழ்கோட்டை" வரலாற்றை எமது இளம் சமூகம் அறிந்து கொள்ளவேண்டும் எனும் நோக்குடன் தொடராகப் பிரசுரிக்கப்படுகிறது. (ஆ-ர்)



01 செங்கை ஆழியான்

## பிலிப் தே ஒலிவேறா

யாழ்ப்பாணக் கடலேரி ஊடாகப் போர்த்துக்கேயப் பறங்கியர்களின் போர்க்கலங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரான நல்லூரைக் குறியாகக் கொண்டு பிரவேசித்தன. சோளகக் காற்றின் வேகமான உதைப்பு தொடர்வரிசையாகப் பிரவேசித்த 43 மரக்கலங்களையும் 250 வள்ளங்களையும் கிழக்குத் திசையில் அலையெறியும் கடல் நீரைக் கீறிக்கிழித்தபடி விரைய வைத்தது.

பக்கத்திற்கு ஐந்து பீரங்கிகள் பொருத்தப்பட்ட பெரிய மரக்கலங்களிலிருந்து துவக்குகள் ஏந்திய வீரர்களைக் கொண்ட வள்ளங்கள் வரை அம்மரக் கலத் தொகுதியிலிருந்தன. பாரிய மரக்கலங்கள் பிரதான பெரும் பாயோடு ஐந்து துணைப்பாய்களைக் கொண்டிருந்தன. லிஸ்பன் நகரத்து மரக்கலத் தச்சர்கள் வடிவமைந்த அற்புதமான கலங்கள், ஆழ்சமுத்திரங்களின் அலையெறிதலைத் தாண்டி அமைதியான யாழ்ப்பாண கடல் நீரேரியை ஆக்கிரமிக்கும் பேராசையுடன் விரைந்தன.

இது ஆக்கிரமிப்பன்று பழிவாங்கல் என அப்படைக்கல அணிக்குத் தலைமை தாங்கிவரும் போர்த்துக்கேயத் தளபதி அந்திரே பூர்த்தாடு டி மென்டென்சா தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான். யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது போர்த்துக்கேயர் எடுக்கும் மூன்றாவது படையெடுப்பு இதுவாகும்.

தென்னிலங்கையில் ஆதிக்கம் பெற்ற போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரச் சந்தர்ப்பம் பார்த்திருந்தனர். கி.பி 1542 ஆம் ஆண்டு பிரான்சிஸ் சவேரியர் என்ற பெயர் கொண்ட ஒரு போர்த்துக்கேய மதகுரு மன்னாருக்கு வந்து 600 பேரைக் கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்தார்.

அவ்வேளை யாழ்ப்பாண அரசின் மன்னனாக விளங்கிய சங்கிலி செகராசசேகரன் அதனைக் கேள்வியுற்றுப் படையுடன் மன்னார் சென்று மதம் மாறிய மக்களையும் மதம் மாற்றிய குருவையும் சிரச்சேதம் செய்வித்தான். மன்னாரில் நிகழ்ந்து முடிந்த இத் துயரச் சம்பவத் திற்காகப் பழிவாங்கும் பொருட்டு கி.பி.1543 இல் போர்த்துக்கேய ரின் முதலாவது படையெடுப்பு யாழ்ப்பாணத்தின் மீது நிகழ்ந்தது.

இப்படைக்கு மாட்டின் அல் போன்சோ தே சௌதா என்பவன் படைத்தலைவனாக வந்தான். அவனது மரக்கலங்கள் நெடுந்தீவில் கரையொதுங்கிய போது சங்கிலி செகராச சேகரனால் வழங்கப்பட்ட திரவியத்தால் திருப்தியடைந்த மாட்டின் அல் போன்சோ தே சௌதா படையுடன் திரும்பிச் சென்றான்.

இரண்டாம் முறை கி.பி. 1560 ஆம் ஆண்டு கொன்ஸ்தாந்தீனு தே பிறகன்சா எனும் தளபதியின் தலைமையில் போர்த்துக்கேயப் படை 77 மரக்கலங்களுடன் கரையூரில் இறங்கியது.

(தொடரும்...)




காலத்தின் பதிவு 99

# கடல் புறா

## வினை விதைத்தலும் வினை அறுத்தலும்

மீண்டும் மௌனம் நிலவியது அந்த அறையில். கடைசியாக அமீர்தான் தன் ஆசனத்தைவிட்டு எழுந்து இளையபல்லவனைத் தனது பெருவிழிகளால் நோக்கினான். பிறகு அந்த ராட்சத விழிகள் மற்ற உபதலைவர்கள் மீதும் சுழன்றன.

மீண்டும் இளையபல்லவனை நோக்கிய விழிகளில் திட்டமான முடிவு இருந்தது. "இளைய பல்லவரே! பல ஆபத்துகளை நாம் இதுவரை பகிர்ந்து கொண்டு இருக்கிறோம். இனியும் பகிர்ந்து கொள்வோம். நானும் உங்களுடன் இங்கேயே தங்கத் தீர்மானித்து விட்டேன். மிஞ்சினால் ஆபத்தின் முடிவு மரணம்தானே, அதற்கு நான் தயார்" என்றான் அமீர்.

அமீரின் முடிவு மற்றவர்களின் முடிவையும் நிர்ணயித்துவிட்டது. இளையபல்லவனுக்கு ஏற்படும் கதி தங்களுக்கும் ஏற்படட்டும் என்று அவனுடன் தங்கவே தீர்மானித்தார்கள் மற்ற உபதலைவர்களும். அந்த முடிவுக்குப் பிறகு தன் ஆசனத்தைவிட்டு எழுந்த இளைய பல்லவன், அவர்களை நோக்கிக் கூறினான்,

"தலைவர்களே உங்களுக்கு என்னிடமிருக்கும் அன்பை நான் அறியாதவன் அல்ல. ஆனால் என் செய்கைகளால் விளைந்துள்ள ஆபத்தை உங்கள் மீது சுமத்த நான் விரும்பாததாலேயே உங்கள் முடிவைத் தெரிந்துகொள்ள விரும்பினேன். நீங்கள் என்னுடன் தங்கத் தீர்மானித்துவிட்டதால் இனி என் திட்டத்தைக் கூறுகிறேன். கவனமாகக் கேளுங்கள்." என்று கூறி அறையில் உலாவிய வண்ணம், பலவர்மனை வெற்றி கொள்ளவும் பூர்வகுடிகளை முறியடிக்கவும், எந்த ஒரு பணியை நாடி அக்ஷயமுனை வந்தானோ அந்தப் பணியை நிறைவேற்றவும் உதவக்கூடிய மிகவும் துணிகரமான திட்டமொன்றை விரிவாக்கலானான் இளையபல்லவன். அந்தத் திட்டத்தின் ஆபத்து எல்லையற்றது என்பதையும் தங்கள் ஒவ்வொருவர் வாழ்வும் ஒவ்வொரு விநாடியிலும் சோதனையில் இருக்கும் என்பதையும் உபதலைவர்கள் புரிந்து கொண்டார்கள். அது மட்டுமல்ல, ஆரம்பத்திலேயே இரண்டொருவர் உயிர் போய்விடுமென்ற உண்மையும் புரிந்திருந்தது. அவர்களுக்கு தங்களுடைய நிலையை விட இளையபல்லவன் நிலை பேராபத்து வாய்ந்தது என்பதை அவர்கள் புரிந்து கொண்டதால் அவனைப் பற்றிக் கவலைப்படவும் செய்தார்கள்.

இளையபல்லவன் இதயத்தில் மட்டும் அச்சமில்லை. அவன் சம்மதப்பட்ட மட்டில் அது தலைக்குமேல் போய் விட்ட ஆபத்து. "தலைக்கு மேல் ஓடிய வெள்ளம் சாண் போனாலென்ன, முழம் போனாலென்ன? என்று எண்ணி மனத்துக்குள்ளேயே நகைத்துக் கொண்டான் இளையபல்லவன்.

### நிதிப் பெட்டியா? சதிப் பெட்டியா?

அக்ஷயமுனைக் கடற்கரையில் அன்றைய காலை நீராட்டத்தை அடுத்து ஏற்பட்ட நிகழ்ச்சிகளையும் அந்த நிகழ்ச்சிகளின் விளைவாக உருவெடுத்துள்ள புதுநிலையையும் அந்தப் புது நிலையைச் சமாளிக்கத் தான் வகுத்துள்ள திட்டத்தையும் தன் உபதலைவர்களுக்கு விளக்கிச் சொன்ன இளையபல்லவன் தன் சம்பந்தப்பட்ட வரையில் ஆபத்து தலைக்குமேல் போய்விட்டதை எண்ணி, "தலைக்கு மேல் ஓடிய வெள்ளம் சாண் போனாலென்ன?, முழம் போனாலென்ன? என்று உள்ளூர நகைத்துக் கொண்டானாலும் தனது உபதலைவர்களின் மனப்போக்கைப் பூரணமாக அறிந்துகொள்ள அவர்கள்மீது மீண்டுமொருமுறை தன் கண்களை ஓடவிட்டான். மரக்கலத்தின் அந்த அறையில் கூடியிருந்த உபதலைவர்களின் முகங்களில் அச்சம் லவலேசமும் இல்லையென்றாலும் கவலை மட்டும் அதிகமாகப் பரவிக் கிடந்ததைக் கவனித்த இளையபல்லவன், அவர்களை நோக்கி, "திட்டத்தில் உங்களில் யாருக்காவது ஆட்சேபணையிருந்தால் சொல்லலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

388

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## மூட்டுவலிக்கான தீர்வுகள்

மூட்டுவலி ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. மூட்டைச் சுற்றியுள்ள தசையிலோ, தசை நாரிலோ ஏற்பட்ட மாற்றத்தினால் மூட்டுவலி ஏற்படலாம். அதேபோல் எலும்புகளில் ஏற்படும் மாற்றத்தால் மூட்டுவலி ஏற்படலாம். Arthritis எனப்படும் மூட்டு வாதத்தினாலும் மூட்டுவலி ஏற்படலாம். பொதுவாக பெண்களில் மாதவிடாய் நிறுத்தம் ஏற்பட்டதை அண்மித்த காலப்பகுதியில் எலும்பின் தடிப்பு குறையத் தொடங்குகிறது. இதனை ஆங்கிலத்தில் Osteoporosis என்பார்கள். பொதுவாக இது நோவை ஏற்படுத்துவதில்லை. சில சந்தர்ப்பங்களில் இது நோவை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. இதை Micro fracture என்று கூறுவார்கள். அதாவது எலும்பில் சில Damage ஏற்படும் போது இந்த நோவை ஏற்படுத்தலாம். இதற்கு பொதுவாக விற்றமின் D இனைக் கொடுப்பதன் மூலமாக நோவைக் குறைக்கக்கூடியதாக இருக்கும். இந்த விற்றமின் மாத்திரைகளை எடுக்கும் போது, உங்களுக்கு நோ குறைகிறது எனில் அவற்றை நீங்கள் பாவிக்கலாம். இதனால் பெரிய பக்கவிளைவுகள் என்று இல்லை.

வலி நிவாரண மாத்திரைகளை அதிகளவிலோ அல்லது நீண்ட காலத்திற்கோ எடுக்கும் போது சிறுநீரக பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் மூட்டு வலி ஏற்படும் போது Panadol அல்லது Paracetamol போன்ற மாத்திரைகளை நீங்கள் எடுக்கலாம். இதற்கு வலி குறையவில்லை எனில் நீங்கள் Local Applications எனப்படும் பூசுகின்ற மருந்துகளை எடுக்கலாம். இதற்கும் வலி குறையவில்லை எனில் வலி நிவாரண மாத்திரைகளை மிகவும் அரிதாக எடுப்பதன் மூலம் உங்கள் சிறுநீரகங்களை பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். எனினும் இந்த வலி ஏற்பட்டதற்கான காரணத்தை அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். இதற்காக அருகிலுள்ள வைத்தியரை நாடி, இதற்கான காரணத்தை அறிந்து, மேலும் நோ ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளலாம்.

பொதுவாக 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களில் முழங்கால் நோ மற்றும் நாரி நோ ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் முக்கியமான காரணமாக இருப்பது Osteoarthritis எனப்படுகிற, எலும்புகளுக்கு இடையிலான சவ்வு தேய்தல் ஆகும். இதற்கு மிக முக்கியமான காரணமாக இருப்பது உடற்பருமன் ஆகும். உடற்பருமன் அதிகமாக இருந்தால் அதை குறைப்பது இன்றியமையாததாகும். சரியான உணவுப் பழக்க வழக்கத்தை கடைப்பிடித்து, உடல் நிறையைக் குறைத்து BMI எனப்படுகிற உடற்திணிவு சுட்டெண்ணை பேணுவதன் மூலம் நோவை குறைக்கக்கூடியதாக இருக்கும். அடுத்ததாக, உடற்பயிற்சி என்பது முக்கியமாகும். Physiotherapy எனப்படும் இந்த உடற்பயிற்சியில் மூட்டுகளிற்கு என்று சிறப்பான உடற்பயிற்சிகள் காணப்படுகின்றன. இவற்றை செய்வதன் மூலமும் நோவை குறைக்கக்கூடியதாக இருக்கும். இதற்கும் நோ குறையாவிட்டால் நோ எண்ணெய்களைப் பாவிக்கலாம். இது தற்காலிகமாக உங்களது நோவை குறைக்கக்கூடியதாக இருக்கும். ஆயுர்வேத நோ எண்ணெய் அல்லது சித்த மருத்துவ நோ எண்ணெய் என்பன தற்காலிகமாக வலிக்கு நிவாரணத்தை வழங்கக்கூடியதாக இருக்கும். பொதுவாக இந்த எண்ணெய்களின் பக்கவிளைவுகள் குறைவாகவே காணப்படுகின்றன.

மூட்டு வலிக்காக கொடுக்கப்படும் மாத்திரைகள் பொதுவாக இரண்டு வகைப்படும். இவை வலிநிவாரண மாத்திரைகள் மற்றும் விசேடமான மாத்திரைகள் ஆகும். வலிநிவாரண மாத்திரைகளை தொடர்ந்து அல்லது அதிகமாக பாவித்தால் சிறுநீரக பாதிப்பு ஏற்படுவதால் இவற்றை மிக அரிதாகவே பாவிக்க வேண்டும். இந்த விசேட மாத்திரைகள் ஆய்வுகளின் படி குறிப்பிட்ட சதவீதமானவர்களுக்கு உதவாவதாக நிரூபிக்கப் பட்டுள்ளது. இந்த மாத்திரைகளுக்கு நோ குறைகிறது என்றால் அவற்றை பயன்படுத்தலாம். இதற்கு பக்கவிளைவுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. அடுத்ததாக ஊசி முறையிலும் இரண்டு வகைகள் இருக்கின்றன. வலியை குறைப்பதற்கு ஊசி மருந்து ஏற்றல் மற்றும் நோயாளியின் இரத்தத்தில் இருந்து மஞ்சள் திரவத்தை பிரித்து எடுத்து மூட்டுக்குள் ஏற்றும் முறை என்பவையாகும். வலியை குறைப்பதற்கு ஏற்றப்படும் ஊசி மருந்துகளில் பக்கவிளைவுகள் குறைவாக காணப்பட்ட போதிலும், நோயாளிக்கு நீரிழிவு, உயர் குருதி அழுக்கம் அல்லது கொலஸ்திரோல் அதிகமாக காணப்படும் போது சில மாற்றங்களை ஏற்படுத்துகிறது. அடுத்த முறையிலும் வைத்தியர் உரிய பாதுகாப்பு முறையுடன் மேற்கொள்வாராயின் பக்கவிளைவுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. இந்த சிகிச்சை முறைகளுக்கு நீங்கள் ஏற்புடையவரா என அறிந்த பின்னரே சிகிச்சை வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட முறைகள் மூலம் நோ குறைவடையவில்லை எனில், Knee replacement therapy எனப்படுகிற சத்திர சிகிச்சை மூலம் மூட்டை மாற்றும் சிகிச்சை செய்யப்படுகிறது. இதனை என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் தான் மேற்கொள்வார்.

Dr. A. நாரணி
மூட்டுவாத வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

## ஆரோக்கியத்தை நோக்கி...

**மன அமைதிக் குறைவு பல சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்தும் என கூறியிருந்தீர்கள். நான் எனது மனதை ஊக்கமாகவும் சந்தோசமாகவும் வைத்திருக்க முயற்சி எடுக்கிறேன். ஆனால் முடியவில்லை. அடிக்கடி கோபம் வருகிறது. இதற்கு என்ன செய்யலாம்?**

இது ஒரு பொதுவான பிரச்சினையாகும். நீங்கள் மகிழ்வாக இருக்க முயற்சிப்பது சிறந்த விடயமாகும். எம்மிடம் இருக்கும் ஒன்றை நாம் இழக்கும் போது வேதனைப்படுகிறோம் துயரப்படுகிறோம். சில சமயங்களில் கோபப்படுகிறோம். ஆனால், அது எம்முடன் இருந்த போது அதை எண்ணி ஒவ்வொரு நாளும் சந்தோசப்பட்டோமா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. எனவே எம்முடன் இருக்கும் போது அதை எண்ணி சந்தோசப்படாமல் அதை இழந்த பின்னர் வருந்துவதோ கோபப்படுவதோ ஒரு புதினமான விடயமாகும். எனவே தினமும் எம்மிடம் இருப்பதை எண்ணி மகிழ்வடையக் கற்றுக் கொள்ளும் பயிற்சி பயனுடையதாக இருக்கும். நாம் யாருக்கும் தாழ்ந்தவர்களும் அல்ல யாரிலும் பார்க்க உயர்ந்தவர்களும் அல்ல. நாம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். எனவே எம்மை இன்னொருவருடன் ஒப்பிட்டு மனக்குழப்பமடைய வேண்டிய அவசியமில்லை. அதேபோல், ஒருவரை இன்னொருவருடன் ஒப்பிட்டு கதைப்பதையும் நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும். இது பலரது மனதை புண்படுத்தும். சிறு சிறு வெற்றிகளை எண்ணி மகிழ்வடையக் கற்றுக் கொள்ள வேண்டும். எமது முயற்சி வெற்றி பெறாவிட்டால், அதிலிருந்து கற்றுக்கொள்ளும் பக்குவத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றும் நிஜத்தில் வாழப்பழக வேண்டும். இதன் மூலம் மன அமைதியைப் பெறலாம். இவ்வாறான சிறு சிறு விடயங்களைச் செய்வதன் மூலம் மனதை மகிழ்வாக வைத்துக் கொள்ள முயற்சி செய்யலாம்.

**எனது வயது 66 மற்றும் நிறை 68 Kg. எனக்கு உயர் குருதி அழுக்கத்தைத் தவிர வேறு பிரச்சினைகள் இல்லை. கிளினிக்குகளுக்கு ஒழுங்காக சென்று வருகிறேன். எனக்கு உடல் சோர்வாக மற்றும் களைப்பாக இருக்கிறது. பசி குறைவாக இருப்பதோடு உடல் நிறை அதிகரிக்கப் பார்க்கிறது. எல்லாவிதமான பரிசோதனைகளையும் செய்து விட்டேன். எந்த பிரச்சினையும் இல்லை என வைத்தியர்கள் கூறுகின்றனர். இதற்கு என்ன செய்யலாம்?**

உங்களுக்கு பசிக்காத போது சாப்பிட வேண்டாம். இது தான் ஆரோக்கியத்தின் அடிப்படை. பசிக்காத போது சாப்பிட்டால் நாம் நோயாளியாகி விடுவோம். அதே நேரம் பசிக்காதவர்களை சாப்பிட சொல்லி வற்புறுத்துவது தவறான செயல் ஆகும். இதில் கவனமாக இருக்க வேண்டும். தற்போதைய உங்கள் நிறை அதிகமாகும். அது மேலும் அதிகரிப்பதாக கூறியிருக்கிறீர்கள். ஆனால் உங்கள் மனம், எனக்கு இன்னும் பசிக்க வேண்டும், நான் இன்னும் சாப்பிட வேண்டும் என விருப்பப்படுகிறது. உங்களுடைய உடம்புக்கு தெரியும் உங்களுக்கு எவ்வளவு உணவு வேண்டும் என்று. உணவு தேவை எனில் உங்களுக்கு பசிக்கும். எனவே உங்கள் உடம்பில் போதுமான அளவு உணவு காணப்படுமாயின் பசிக்காது. நீங்கள் கவலைப்பட்டு இன்னும் சாப்பிட முயற்சித்தால் உங்கள் நிறை அதிகரிப்பதோடு நோய் நிலைகளும் அதிகரிக்கும். இதனால் களைப்பு வீதமும் அதிகரிக்கும். அதிகரித்த உடல் நிறையுடன் உடற்பயிற்சி செய்வதும் கடினமாகும். உடற்பயிற்சி செய்யாமல் விட்டால், உடற்பயிற்சிக்கான Tolerance ஏற்படும். அவ்வாறு காணப்படும் போது சிறு உடற்பயிற்சி செய்யும் போதும் களைப்பு ஏற்படும். எனவே, உங்கள் உடல் நிறையை அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மனவருத்தப்படத் தேவையில்லை. சத்துமா பேணிகளில் தான் சத்துக்கள் இருக்கின்றன என்ற மனப்பதிவை அகற்றி இயற்கையான, ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

**குடிப்பதற்கு பாதுகாப்பான நீர் எது? குடிநீரை வீடுகளில் சேமித்து வைப்பதற்கு எவ்வகையான போத்தல்கள் பாதுகாப்பானவை? மண்கூசாக்கள் பாதுகாப்பானதா?**

மழை நீர் தான் உண்மையிலேயே குடிப்பதற்கு பாதுகாப்பான நீர் ஆகும். மழை நீரைச் சேமித்து வைத்து குடிநீராக பயன்படுத்துவோமானால் எமக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படாது. அடுத்ததாக, வீடுகளில் குடிநீரை சேமித்து வைப்பதற்கு மண்கூசாக்கள் அல்லது கண்ணாடியினாலான போத்தல்கள் பாதுகாப்பானவை. இயலுமானவரை, பிளாஸ்டிக் போத்தல்களின் பாவனையை குறைத்துக் கொள்வது சிறந்தது. குறிப்பாக மெல்லிய பிளாஸ்டிக் போத்தல்கள் பாதுகாப்பற்றவை. இவற்றை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது. அதோடு பிளாஸ்டிக் போத்தல்களில் அல்லது பேணிகளில் சுடுநீரை ஊற்றுவது பாதுகாப்பற்றது. சுடுநீரானது, பிளாஸ்டிக் நீரினுள் செல்லும் அளவு அதிகமாக காணப்படும். எனவே, பிளாஸ்டிக் போத்தல்கள் அல்லது பேணிகளின் பாவனையைக் குறைத்துக் கொள்வது சிறந்தது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தனை இலங்கைக்கு அனுப்ப இந்திய மத்திய அரசு அனுமதி

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட சாந்தனை இலங்கைக்கு அனுப்ப மத்திய அரசு அனுமதி கடிதத்தை நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை அனுப்பியுள்ளது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று, வேலூர் மத்திய சிறையில் அடைக்கப் பட்டிருந்த சாந்தன் 2022 இல் உச்ச நீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் விடுவிக்கப்பட்டார். அதன் பின்னர், அவர் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

இலங்கை தமிழரான சாந்தனுக்கு ஜனவரி 24 ஆம் திகதி உடல் நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர், சாந்தனின் வேண்டுகோளை அடுத்தும் உயர் சிகிச்சைக்காகவும் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்ட அவர், தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கல்லீரல் செயலிழப்புக்கு உள்ளான சாந்தனுக்கு பல்வேறு உடல் நல பாதிப்புகள் ஏற்பட்டிருப்ப தாகவும் இதயத் துடிப்பு, ரத்த அழுத்தம், சுவாச சுழற்சி உள்ளிட்டவை சீராக இருப்ப தாகவும் அதேவேளையில் பிற பாதிப்புகளுக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இலங்கையைச் சேர்ந்த சாந்தனை அந்நாட்டுக்கு அனுப்ப மத்திய அரசு அனுமதி கடிதத்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அனுப்பியுள்ளது. (நி)

# 'நாட்டுக்கான ஒன்றுபட்ட நடவடிக்கை'

## ஐக்கிய குடியரசு முன்னணியின் முன்மொழிவு கையளிப்பு

(கொழும்பு)

ஐக்கிய குடியரசு முன்னணியின் "நாட்டுக்கான ஒன்றுபட்ட நடவடிக்கை" என்ற தலைப்பிலான முன்மொழிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் கொழும்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்றது.



ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட குழுவினர், ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், குறித்த முன்மொழிவை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவன் விஜேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோரும், ஐக்கிய குடியரசு முன்னணியின் சார்பில் கரு பரணவிதான, நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, சட்டத்தரணி ஷிரால் லக்திலக ஆகியோரும் கலந்து கொண்டனர். (நி)

# வலுவடையும் ரூபாவின் பெறுமதி; அதன் பலன் மக்களுக்கு கிடைக்கும்

## வர்த்தக அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையின் பிரதி பலனை அடுத்த மாதம் முதல் நுகர்வோருக்கு பெற்றுக் கொடுக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி கடந்த சில மாதங்களாக படிப்படியாக வலுவடைந்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட வேண்டியது அவசியம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையின் பலன், மார்ச் முதல் வாரத்தில் இருந்து பொது மக்களுக்கு கிடைக்கும் என தான் நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி அத்தியாவசிய பொருட்களை விநியோகிப்பதற்காக விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் இறக்குமதியாளர்களுடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் 29 ஆம் திகதி அமெரிக்க டொலரொன்றின் விற்பனை விலை 328 ரூபா 77 சதமாக பதிவாகியிருந்தது.

தற்போது அமெரிக்க டொலரின் விற்பனை விலை 316 ரூபா 6 சதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (நி)

# சிவனொளிபாதமலை தரிசனம் யாத்திரிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வியாழக்கிழமை கிழமை முதல் சிவனொளி பாத மலைக்கு தரிசனம் செய்ய பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளதாக நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.

அத்துடன் கடந்த மூன்று தினங்களில் இலட்சக் கணக்கான பக்தர்கள் வருகை தந்த வண்ணம் உள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# இன்று ஒரு தகவல் 47



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## உயிர் வாழ்க்கை

ஒருநாள் வயதான ஒருவர் புத்தரிடம் வந்து சேர்ந்தாராம். கொஞ்சக்காலம் அங்கேயே தங்கி இருந்தார். பின்பு உண்மையிலே துறவி ஆகிவிட்டார். ஒருநாள் அந்த சீடரை புத்தர் கூப்பிட்டு இருக்கிறார்.

துறவியாரே இப்போது உங்களுக்கு எத்தனை வயது ஆகிறது என்று கேட்டாராம். அதற்கு அந்த துறவி ஐந்து வயது ஆகிறது என்று சொன்னாராம்.

இதைக் கேட்டதும் புத்தருக்கு ஆச்சரியம். உங்களுக்கு எழுபது வயதுக்கு மேலே இருக்கும் போல இருக்கிறது. ஆனால் ஐந்து வயது என்று சொல்லுகிறீர்களே என்ன காரணம் என்று கேட்டார்.

அதுக்கு இந்த சீடர். எனக்கு உண்மையான ஞானம் கிடைத்து ஐந்து வருடம் ஆகிறது. அன்பு என் உள்ளத்திலே தோன்றி இருப்பதும் இந்த ஐந்து வருடத்தில்தான். இதுக்கு முன்னாடி நான் வாழ்ந்து இருக்கின்ற வாழ்க்கை ஒரு கனவு மாதிரி தெரிகிறது. அந்த வாழ்க்கையினாலே எனக்கு எந்த பிரியோசனமும் இல்லை என்று தோன்றுகிறது. அதனாலே எனக்கு வயது ஐந்து என்று சொன்னார். அவர் ஐந்து வருடம் தான் இந்த உலகத்தில் வாழ்ந்ததாக நினைக்கிறார். அது உண்மை தான்.

இந்த உலகத்தில் உயிரோடு வாழ்பவர்களை எல்லாம் உயிர் வாழ்பவர்கள் என்று ஒத்துக்கொள்ள முடியாது.

வள்ளுவரே இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

**வசை ஒழிய வாழவாரே வாழ்வார்**
**இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர்**

என்கிறார் அவர். பழி உண்டாகாமல் வாழனும். அது தான் வாழ்க்கை. அடுத்தவர்களுக்கு உதவி செய்து அதனாலே வருகிற புகழ் இருக்கே அந்த புகழோட வாழனும். அடுத்தவர்களுக்கு கெடுதல் செய்தால் பழி வரும். அந்தப் பழியோட வாழ்பவர்களை வாழ்பவர்களாகவே சேர்த்து கொள்ள முடியாது. கெட்ட எண்ணங்கள் எல்லாம் அறவே இல்லாமல் போகணும். அப்புறம்தான் ஒரு தெளிவு வரும் ஞானம் வரும்.

ஒரு குரு இருந்தார். அவரிடம் போய் ஆசீர்வாதம் வாங்கி விட்டு வரலாம் என்று நினைத்து ஒருத்தர் சென்று கொண்டிருந்த பொழுது வழியிலே ஒரு யோகி வந்தார். எங்கப்பா போகிறாய் என்று கேட்டார். அவன் அதற்கு குருவை பார்க்கப்போகிறேன் என்று சொன்னான்.

அந்த குரு மீது இந்த யோகிக்கு ஏற்கனவே பொறாமை இருந்தது. அதனாலே அந்த சீடனை பார்த்து உனது குருவுக்கு ஒன்றுமே தெரியாது. அவர் ஒரு முட்டாள். நீ அவரை விட பெரிய முட்டாள் அதனாலே தான். நீ அவருக்கு சீடனாக இருக்கிறாய். உன்னோட குருவாலே ஏதாவது அற்புதம் செய்து காட்ட முடியுமா? என்னை மாதிரி தண்ணி மேல் நடக்க முடியுமா? ஆகாயத்தில் பறக்க முடியுமா? பூமியில் புதைந்து கிடக்க முடியுமா? அவரால் எதுவும் முடியாது . அப்படிப்பட்ட குருவிடம் போய் ஏன் நீ நேரத்தை வீணாக்குகின்றாய் என்று தற்பெருமையோடு கேட்டாராம்.

அதற்கு அவன் சொன்னானாம். நான் ஏன் அவரை குருவாக ஏற்றுக்கொண்டு வாழ்கிறேன் என்றால் அவர் எப்போதும் கோபப்படமாட்டார், பிறரை குறை கூற மாட்டார். இதை தான் அற்புதத்தில் எல்லாம் அற்புதம் என்று நினைக்கின்றேன் என்று சொன்னான் சீடன்.

இதைக்கேட்டதும் தலையை தொங்கப் போட்டுக்கொண்டு போய் விட்டாராம் அந்த யோகி.

குளத்தில் மேல் நடக்கும் அதிசயத்தை விட கோபப்படாமல் நடக்கும் அதிசயம் தான் மிகவும் பெரியது. அவ்வாறு நடக்க பழக்கப்படுத்தி கொள்வது தான் மனிதருக்கு நல்லது.

கவலை எப்படி வருகிறது என்பதற்கு ஒருத்தர் காரணம் சொன்னார்.

முதலில் கோபம் வருமாம். பின்பு அதைக் காட்டுவதற்கு எதிரில் யாரும் இல்லை என்றால் அந்த கோபம் அவர்கள் மீது திரும்புமாம். அந்த சூழலில் தான் அதனை கவலை என்கிறோமாம்.

கவலை வருவதற்கு இப்படியும் ஒரு வழி.

மனதிலே சாந்தி இல்லாமல் வாழ்ந்தால் அது என்ன வாழ்க்கை! சிலருக்கு கடைசிக் காலம் கூட அது வருவதில்லை.

சர்வாதிகாரி ஒருத்தர் மரணப்படுக்கையில் இருந்தார்.

அவரை வைத்தியர்கள் எல்லாம் கைவிட்டு விட்டார்கள். அவனுக்கு வைத்தியம் பார்க்க வைத்தியர் ஒருத்தர் வந்தார். செத்துக் கொண்டு இருக்கிறவன் மன சாந்தியோடையாவது மறுஉலகம் போய்ச் சேரட்டும் என்று நினைத்தார்.

மேன்மை தாங்கிய அதிபரே! தங்கள் எதிரிகளை எல்லாம் மன்னித்து விடுகிறீர்களா என்று கேட்டாராம். அதற்கு சர்வாதிகாரி சாவகாசமாக பதில் சொன்னாராம்.

ஐயா நான் மன்னித்து விடுவதற்கு தயாராக இருக்கிறேன். ஆனால் இப்போது எனக்கு விரோதிகள் யாரும் இல்லை என்று சொன்னாராம்.

ஏனென்றால் ஏற்கனவே எல்லோரையும் சுட்டுத்தள்ளி விட்டேன் என்றாராம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சீனாவில் நிலவும் சீரற்ற காலநிலையால்

# சுமார் 100 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து



(பீஜிங்)

சீனாவில் அதிவேக வீதியில் சுமார் 100 கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்குள்ளாகின.

அதாவது சீனாவின் பெரும்பாலான பகுதிகளில் கடந்த சில வாரங்களாக கடுமையான குளிர் வாட்டி வதைக்கிறது. இதனால் வீதிகளில் பனி சூழ்ந்துள்ளதால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

சுஜோ நகரில் உள்ள எக்ஸ்பிரஸ் சாலையில் பனிமழை பெய்ததால் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

பனி படர்ந்த அந்த சாலை வழியாக பயணித்த சில வாகனங்கள் கட்டுப்பாட்டை இழந்து சறுக்கிக் கொண்டே சென்று விபத்துக்குள்ளாகின.


பின்னால் வந்த வாகனங்களும் பனியில் சறுக்கிக் கொண்டு அவற்றின் மீது மோதி சேதமடைந்தன.

இவ்வாறு 100 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஒரே இடத்தில் குவிந்து கிடந்ததால் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

இந்த விபத்தில் பலர் காயமடைந்தனர். போக்குவரத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விபத்தில் சிக்கிய வாகனங்களை அப்புறப்படுத்தினர். (நி)

# ஸ்பெயினில் தீப்பரவல் 10 பேர் உயிரிழப்பு





(ஸ்பெயின்)

ஸ்பெயினின் வலைன்சியாவிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ பரவலில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் மாயமாகியுள்ளனர்.

இடிபாடுகளில் இருந்து 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்டதை அடுத்து, காணாமல் போனவர்களை தேடும் பணியில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும், தீ பரவியதற்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கட்டடத்தின் முகப்பில் அதிக அளவில் எரியக்கூடிய உறைப்பூச்சு, அப்பகுதியில் வீசிய பலத்த காற்று தீ பரவுவதற்கு காரணமாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் அந்த இடத்தை பார்வையிட்டதுடன் தேவையான உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

### உத்தரப் பிரதேசத்தில்

# கட்டுப்பாட்டை இழந்து குளத்தில் பாய்ந்த டிராக்டர்

## 7 குழந்தைகள் உட்பட 15 பேர் உயிரிழப்பு

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தில் குளத்தில் டிராக்டர் தவறி விழுந்ததில் 7 குழந்தைகள் உட்பட 15 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அம்மாநிலத்தின் காதர்கஞ்ச் பகுதியில் உள்ள கங்கை நதியில் புனித நீராடுவதற்காக பக்தர்கள் சென்றபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தின் காதர்கஞ்ச் மாவட்டத்தில் நேற்று டிராக்டர் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் உள்ள குளத்திற்குள் விழுந்து விபத்துக்குள்ளானது. காதர்கஞ்ச் பகுதியில் உள்ள கங்கை நதியில் புனித நீராடுவதற்காக சென்ற போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் 15 பேர் உயிரிழந்திருக்கின்றனர். அதில் 7 குழந்தைகள் மற்றும் பெண்களும் அடங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# அமெரிக்கா-தென்கொரியா இணைந்து மீண்டும் கூட்டுப்போர் பயிற்சி

## கைவிடுமாறு வடகொரியா எச்சரிக்கை

(சியோல்)

வடகொரியாவின் தொடர் ஏவுகணை சோதனைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தென்கொரியா அமெரிக்காவுடன் இணைந்து மீண்டும் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

வடகொரியா தனது தொடர் ஏவுகணை சோதனையால் கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்துகின்றது.

இதனால் தங்களது பாதுகாப்பு கருதி தென்கொரியாவும் ஜப்பானும் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன.

இது தங்களுக்கு எதிரான போர் ஒத்திகை என கருதும் வடகொரியா இந்த பயிற்சியை கைவிட வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில் இதனை பொருட்படுத்தாத தென்கொரியா அமெரிக்காவுடன் இணைந்து மீண்டும் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகிறது.

அப்போது போர் விமானங்களை இடைமறித்து தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட்டதாக தென்கொரிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி)

# ரஷ்ய சர்வாதிகாரத்திற்கு எதிராக உக்ரைனுக்கு தொடர்ந்து உதவுவோம்

## இங்கிலாந்து பிரதமர் ரிஷிசுனக்



(லண்டன்)

ரஷ்யா தனது அண்டை நாடான உக்ரைனை ஆக்கிரமித்து நேற்றுடன் 2 வருடங்கள் ஆகின்றன. ரஷ்யாவை எதிர்த்து அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் தீவிரமாக போரிட்டு வருகிறது.

போர் நிறுத்தம் மற்றும் படைகளை உக்ரைனிலிருந்து திரும்ப பெறுவது குறித்து பல உலகநாடுகள் கடந்த பல மாதங்களாக முன்வைத்த கோரிக்கைகளை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் புறக்கணித்து வந்தார்.

இதைத் தொடர்ந்து சில [illegible] ரஷ்யாவிற்கு எதிராக மேலும் பல பொருளாதார மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடுகளை இங்கிலாந்து கொண்டு வந்தது.

பல்வேறு காரணங்களால் அமெரிக்காவிலிருந்து உக்ரைனுக்கு கிடைத்து வந்த பொருளாதார மற்றும் இராணுவ உதவிகள் தொடர்ந்து கிடைப்பதில் சிக்கல் நீடித்து வருகிறது.

இந்நிலையில் இங்கிலாந்து பிரதமர் ரிஷிசுனக் உக்ரைனை தொடர்ந்து ஆதரிப்பதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய தமது நாடு தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

மேலும் ரிஷிசுனக் உக்ரைனுக்கு 250 மில்லியன் பவுண்ட் மதிப்பிற்கு ராணுவ தளபாட உதவிக்காக நிதி ஒதுக்கியுள்ளார்.

இது குறித்து இங்கிலாந்து பிரதமர் ரிஷிசுனக் தெரிவித்ததாவது,

போர் தொடங்கி 2 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் ரஷ்யாவின் ஆதிக்க மனப்பான்மையை எதிர்க்கும் நிலைப்பாட்டில் இங்கிலாந்து மேலும் உறுதியாக உள்ளது.

என்றுமே சர்வாதிகாரம் வெற்றி பெறுவதில்லை. நாங்கள் இன்றும் உக்ரைன் பக்கமே நிற்கிறோம். தொடர்ந்தும் நிற்போம்.

இதற்காக எத்தனை நாட்கள் என்னென்ன செய்ய வேண்டுமோ அனைத்தையும் செய்வோம். இவ்வாறு ரிஷி சுனக் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நான் பெரிது நீ பெரிது என்றல்லாமல் கொள்கை பெரிது என்று செயற்படுங்கள். கொள்கை நமக்கு பெரிது என்றால் நாம் எல்லோரும் அதற்குச் சிறியவர்களே. –ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மூலமூர்த்தி அடங்கினால் பரிவாரங்கள் எழுந்தாடும்

வசதி படைத்தவர்கள் செல்வாக்கு மிகுந்தவர்களாக இருப்பதனால், அவர்கள் எதனையும் கனகச்சிதமாகச் செய்து முடித்து விடுவர்.

ஆனால் நடுத்தர மற்றும் சாதாரண மக்கள் ஒரு சிறு காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் ஆற்றலைய வேண்டி இருக்கிறது.

அதிலும் குறிப்பாக அரச நிறுவனங்களில் நடுத்தர மற்றும் சாதாரண மக்கள் தமது அலுவல்களை நிறைவேற்றிக் கொள்வதென்பது முடியாத காரியம்.

ஏனெனில் அரச உத்தியோகத்தர்களில் கணிசமானவர்கள் செல்வாக்குடைய – செல்வந்தர்களின் அலுவல்களை உடனடியாகவே செய்து முடித்து விடுவர்.

அவர்களின் காரியங்களைச் செய்து கொடுக்காவிடில், அது தமக்கு ஆபத்தாக அமைந்துவிடும் என்ற காரணம் கருதி, அத்தகையவர்களின் அலுவல்களை எழுந்து நின்று செய்துவிட்டு, சாதாரண மக்கள் வரும் போது அவர்களை அலைக்கழித்து உரிய கருமத்தைச் செய்யாமல் காலம் கடத்துவர் அல்லது அதனை அப்படியே கிடப்பில் போட்டு விடுவர்.

என்ன செய்வது சாதாரண மக்கள் அப்பாவிகளாக இருப்பதனாலும் அவர்களுடைய முறைப்பாடுகளை அரச உயர்மட்டம் உதாசீனம் செய்வதாலும் குறித்த அரச ஊழியர் தம்மைப் பழிவாங்குவர் என்ற பயத்தாலும் சாதாரண மக்கள் மௌனமாக இருந்து விடுகின்றனர்.

இவ்வாறு சாதாரண மக்களை அலைக்கழிக்கின்ற அதர்மம் அரச நிறுவனங்களில் இருந்து ஆரம்பமாகின்றது.

இது ஒருபுறமிருக்க, சில அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் தமக்கு எதிரானவர்கள் என்று கருதுபவர்களையும் கற்பனைக்குட்படுபவர்களையும் பழிவாங்குகின்ற காரியங்களை ஓயாமல் செய்து கொண்டிருப்பர்.

உண்மையில் ஓர் அரச அதிகாரி என்பவர் பெருந்தன்மை கொண்டவராக இருக்க வேண்டும். தனக்குக் கிடைத்த பதவி மக்கள் பணி செய்வதற்காக இறைவனால் தமக்கு ஈந்தளிக்கப்பட்டதென்று மனதாரச் சிந்திக்க வேண்டும்.

இதைவிடுத்து எனது பொறுப்பில் இருப்பதனால் நான் எதுவும் செய்வேன். நான் செய்வதுதான் சரியானது. என் மீது எவரும் குறை காண முடியாது என்று மமதை கொண்டால், எதுவுமே செய்ய முடியாமல் போகும்.

இங்குதான் அந்த அரச அதிகாரிக்கு மேற்பட்ட அரச நிர்வாகம் தனது கடமையைச் சரியாகச் செய்யவில்லை என்ற குறைபாடு முன் எழும்.

ஆம், ஓர் அரச உயர் அதிகாரி தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறாரெனில், அவர் தனது பணியாளர்களை உதாசீனம் செய்கிறாரெனில், பொதுமக்களைக் கண்டு கொள்வதில்லை எனில், அதற்குக் காரணம் அவருக்கு மேற்பட்ட அரச நிர்வாகம் மிக மோசமாக உள்ளது என்பதுதான்.

எனவே அரச நிர்வாகத்தில் இருக்கக் கூடிய ஒவ்வொரு கட்டமைப்பும் படிமுறையும் சீராக இயங்க வேண்டுமாயின், மேலதிகாரம் என்பது மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

மேலதிகாரம் உறங்கினால், பரிவாரங்கள் தாம் தாம் நினைத்தபடி நடக்கத் தொடங்கி விடும்.

இப்போது வடபகுதியில் பரிவாரங்கள் எழுந்து ஆடத்தலைப்பட்டுள்ளன. அவை அடக்கப்படாவிட்டால் மூலமூர்த்தி, மகிமை இழந்து போவது தவிர்க்க முடியாததாகி விடும்.

# முதியவரை தாக்கிவிட்டு தொலைபேசி திருட்டு

## வவுனியாவில் மூவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் முதியவர் ஒருவரைத் தாக்கி விட்டு கைத்தொலைபேசியை திருடிய சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா - பண்டாரிக்குளம் பகுதியில் முதியவர் ஒருவர் வீதியால் சென்ற போது அவரை தாக்கி விட்டு அவரிடம் இருந்த கைத்தொலைபேசியை இருவர் பறித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட முதியவர் வவுனியா பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் 17 மற்றும் 38 வயதுடைய இருவர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம்மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த இருவரும் முதியவரிடம் இருந்து பறித்து சென்ற கைத்தொலைபேசியை வவுனியா நகரப் பகுதியில் உள்ள மதுபான நிலையம் ஒன்றில் கொடுத்து விட்டு மது அருந்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த கைத்தொலைபேசியை பெற்றுக் கொண்ட மதுபானசாலை ஊழியரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் இருந்து திருடப்பட்ட கைத்தொலைபேசியும் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசா ரணைகளின் பின் குறித்த மூவரையும் நீதி மன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரி வித்தனர். (ம-7,250)

# முகமூடி அணிந்தவர்களால் நள்ளிரவில் நகைகள் கொள்ளை

(அக்கராயன்)

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஸ்கந்தபுரம் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை நள்ளிரவில் முகமூடி அணிந்த கொள்ளையர்களால் வீட்டில் இருந்த சுமார் 8 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

குறித்த வீட்டின் உரிமையாளர் அரச நிறுவனம் ஒன்றில் இரவு கடமைக்காக சென்ற பொழுது வீட்டில் தனிமையில் இருந்த குடும்பப் பெண்ணை மிரட்டி நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். ( நி-316)

## யாதுமானவள் செயலூக்கவுரை

யாழ் இந்திய துணைத் தூதரகமும் தமிழ்நாடு விருதுநகர் றோட்டரிக் கழகமும் இணைந்து வழங்கும் முனைவர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களது "யாதுமானவள்" செயலூக்கவுரையானது (Motivation Speech) இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை **காலை 09:00 மணியிலிருந்து மாலை 5:00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** ஈரப்பெரியகுளம் எனும் இடத்தில் மின்சாரம் தடைப்படும்.

# பரமபிதா காட்டிய பாதை

## இயேசுவின் முகச்சாயலை எம்மில் கொண்டு வருவோம்

இயேசு உயர்ந்த மலையில் தோற்றம் மாறிய நிகழ்வை குறிக்கும் பைபிள் பகுதி மாற்கு 9:2-10 இன்று எமக்கு தரப்படுகின்றது. பி.பி.சி நிறுவனம் தயாரித்த "மனித உடல்" எனும் ஒரு அறிவியல் திரைப்படம்: "காலையில் எலாம் அடிக்கிறது. தூங்கிக்கொண்டிருந்த ஓர் இளைஞனின் காதுகளைத் தாக்கிய அந்த ஒலி அலைகளால் அவன் காதுக்குள் இருந்த செல்களில் மாற்றங்கள். எலாம் கேட்டு கண் விழித்தான். கண்ணிமை உரசியதால் விழியின் மேற்படலத்தில் இருந்த செல்களில் மாற்றங்கள். அந்த இளைஞனின் அன்றைய வாழ்வுக்கான மாற்றங்கள் துவங்கிவிட்டன." என்ற வரிகளுடன் அப்படம் ஆரம்பமாகிறது. மனித வாழ்வின் மையமாகிய மாற்றம் மனிதனுக்கு அடிப்படையாகத் தேவையானது. வாழ்வில் மனித உடலிலும் மனதிலும் எண்ணங்களிலும் அறிவிலும் எத்தனை மாற்றங்கள். அது இல்லையெனில் மரணம் தான். ஒவ்வொரு மாற்றமும் துன்பம், போராட்டம் நிறைந்தது. நம்மைச் சுற்றி எழும் மாற்றங்கள் ஒரு கனவுலகை உருவாக்கினாலும் அந்தக் கனவுகளின் நடுவிலும் வாழ்வின் குறிக்கோளை நினைவில் கொள்வது நமக்கு நல்லது.

தோற்ற மாற்றம் என்றால் என்ன? ஏன்?எப்படி அது உண்டாகிறது? மாற்றம் தேவையா,இல்லையா? மாற்றம் நல்லதா, கெட்டதா? "இறுதி இரவுணவு" என்ற உலகப்புகழ் மிக்க ஓவியத்தை லியோனார்டோ டாவின்சி வரையும் போது நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் ஒரு சம்பவம். லியோனார்டோ டாவின்சி ஓவியம் வரைவதற்கு ஆட்களைத் தேடுகிறார் என்று அறிந்ததும் பல இளைஞர்கள் அவரது இல்லம் சென்றனர். அந்தக் கூட்டத்தில் அமைதியாக, கொஞ்சம் ஒதுங்கியே நின்ற ஒரு 20 வயது இளைஞனை டாவின்சி முதலில் தேர்ந்தெடுத்தார். அவரை வைத்து, இயேசுவை வரைந்தார். பின்னர் ஒவ்வொரு சீடரையும் வரைவதற்கும் ஆட்களைத் தேர்ந்தெடுத்து, வரைந்து கொண்டிருந்தார். ஆறு ஆண்டுகளாய்த் தீட்டப்பட்ட இந்த ஓவியத்தின் இறுதிக்கட்டத்தில் உரோமைச் சிறையிலிருந்து அனுப்பப்பட்ட ஒரு இளைஞனை வைத்து யூதாஸை வரைந்து கொண்டிருந்தபோது அவன் அழுதான். ஏன் அழுகின்றாய் என விபரம் கேட்டார் டாவின்சி. "ஆறு வருடங்களுக்கு முன் நீங்கள் இயேசுவை தீட்டுவதற்குப் பயன்படுத்திய இளைஞனும் நான்தான்" என்று அவன் சொன்னான். ஒரு இளைஞன் ஒரு சில ஆண்டுகளில் உருவம், பழக்கவழக்கம் இவற்றில் பெரும் மாற்றங்கள் அடைவதை எல்லோருமே பார்த்திருக்கிறோம்.

கூட்டுப்புழு கூட்டிலிருந்து வெளியேறுவதற்கு நீண்டதொரு போராட்டம் செய்ய வேண்டியுள்ளது. ஆனால், அந்தப் போராட்டத்தின் போது அதன் இறக்கைகளைப் பெரிதாக்கும். போராட்டத்தின் இறுதியில் அழகான வண்ணத்துப்பூச்சி வெளியேறிப் பறக்கும். கூட்டுப்புழு பார்க்க அழகில்லாதது. வண்ணத்துப்பூச்சி அழ்குக்கு இலக்கணமாகிறது. இந்தமாற்றம் உருவாக, போராட்டம் தேவை.

உயர்ந்த மலையில் இயேசுவின் உருமாற்றம் சீடர்களிடம் உருவாக்கிய மாற்றங்கள். பேச்சிழந்தனர், பயந்தனர், அச்சம் கொண்டனர். பின்னர் அவர்களுள் பேதுரு மட்டும் என்ன பேசுகிறோம் என்பதை உணராது எதையோ பேசினார். "நாம் இங்கேயே தங்கி விடலாம்" என்கிறார். உடனே மேகங்களின் வழி இறைவன் சொன்ன பதில். "என் அன்பு மகன் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்." பேசுவதைக் குறைத்துக்கொண்டு, கேட்க வேண்டும். இறைவார்த்தையைக் கேட்க வேண்டும். இயேசு, இங்கே தங்கியது போதும். வாருங்கள் மலையை விட்டிறங்கி நம் பணியைத் தொடர்வோம் என்று கூறுகிறார். கடவுள் அனுபவங்கள் வாழ்க்கைக்குத் தேவை. கடவுளோடு தங்குவதற்குக் கூடாரங்கள், கோவில்கள் அமைப்பது நல்லதுதான். ஆனால், கோவில்களிலேயே தங்கி விடமுடியாது-கூடாது. இறைவனைக் கண்ட, தரிசித்த அந்த அற்புத உணர்வோடு, மீண்டும் உலகிற்குள் செல்ல வேண் டும். அங்கே, மக்கள் மத்தியில் இறைவனைக் காணவும் அப்படிக் காண முடியாதவர்களுக்கு இறைவனைக் காட்டவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். உருமாறிய கடவுளைக் கண்ணாரக் கண்ட சீடர்களை அழைத்துக் கொண்டு இயேசு மலையிலிருந்து மக்களை உருமாற்றவே இறங்குகிறார்.

வாழ்கையில் ஏற்படும் மாற்றங்கள், அந்த மாற்றங்களை எதிர்கொள்ள நாம் மேற்கொள்ளும் போராட்டங்கள் இவை நம்மையும் நமது சூழ்நிலைகளையும் மாற்றும், புரட்டிப் போடும். இந்த நாட்களில் பலர் "என்னடா வாழ்க்கை, எல்லாம் நரகமாக இருக்கிறது. ரோட்டில நாட்டில இருக்க முடியவில்லை. இந்த இளைஞர்கள் அட்டகாசம் கொஞ்ச நஞ்சமல்ல, நாம் இங்கே இருப்பது நல்லது என்று சொல்லவோ, நினை த்துப் பார்க்கவோ முடியவில்லை என அழுகிறார்கள். எனவே நாம் நல்லவராவோம். சிறைச்சாலைக்கு செல் லும் முகச்சாயலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். இயே சுவின் முகச்சாயலை எம்மில் கொண்டுவருவோம். மக் களை உருமாற்றும் பணியில் நாமும் இணைவோம்.

**ம.பிரான்சிஸ்க்,**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

மிதுன இராசி மிருகசீரிடம் 3. ஆம் பாதம் 1990 இல் பிறந்த பட்டயக் கணக்காளர் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு (19267)

**076 641 8271**

## தேக்கம் கன்றுகள் தேவை

**500**

தேக்கம் கன்றுகள் தேவை

தொடர்பு (19267)

**076 641 8271**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் பேருந்து நிலையத்திற்கு முன் அமைந்துள்ள நிறுவனத்திற்கு கணக்காளர், உதவியாளர் தேவை. (19271)

**077 991 1025**

## பணிப்பெண் தேவை

வீட்டிலே தங்கியிருந்து குழந்தையை பராமரிக்கக்கூடிய வீட்டு வேலை தெரிந்த பணிப்பெண் தேவை. (சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்) (19270)

**076 441 4749**


# வவுனியாவில் மேழி 70 விழா

(வவுனியா)

கலாநிதி மேழிக் குமரனின் எழுபது அகவையையும் ஐம்பதாண்டு இலக்கிய பயணத்தையும் முன்னிட்டு இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் நிறுவுநர், தமிழருவி த.சிவகுமாரனின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் த.மங்களேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், கல்வி அமைச்சின் ஓய்வு நிலை மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லை நடராஜா மற்றும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வு நிலை பீடாதிபதி க.பேர்ணாட், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் ந.சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (நி-299)


## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் பல்பொருள் வணிக வர்த்தக நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

- சாரதி - (AD, அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
- வாகனத்தில் சென்று விற்பனை செய்பவர்
- முகாமையாளர்
- பணியாளர்கள் (கணினி அறிவுள்ளோரும்)

(19273)

**075 759 0998**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கந்தரோடையில் 11 பரப்பு நெல் வயல் விற்பனைக்குண்டு.

நல்ல சாகுபடி செய்யக் கூடிய, குளக்கட்டுக்கு அருகில் உள்ள வயல் நிலம், அருகில் குடிமனைகள், போக்குவரத்து வசதி உள்ள பாதை ஓரம் உள்ள காணி, கோடை பயிர்கள் (வெங்காயம், கத்தரி, வெண்டி, பூசணி, கீரை போன்ற பயிர்கள் செய்யலாம்)

தொடர்பு : காணி உரிமையாளர் (19025)


**076 830 7424, 077 400 2382**


## நாட்...

நாளாந்தம் மூன்று வேளைகளில், உணவை உட்கொண்டவர்கள் தற்போது இரண்டு வேளையும், இரண்டு வேளைகள் உணவை உட்கொண்டவர்கள் ஒருவேளை மாத்திரம் உணவை உட்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)





தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளுக்கான ஸ்டிக்கர்கள் ஒட்டும் நிகழ்வு நடைபெற்றது. (படம்-தேவானந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 200 | 370 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 120 | 150 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 500 | 700 | 410 |
| தக்காளி | 600 | 550 | 550 | 800 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 150 | 140 |
| கோவா | 350 | 450 | 450 | 500 | 350 |
| கரட் | 600 | 600 | 400 | 800 | 500 |
| பூசணி | 200 | 240 | 140 | 300 | 170 |
| புடோல் | 200 | 150 | 100 | 250 | 120 |
| வாழைக்காய் | 200 | 250 | 120 | 250 | 180 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 200 | 300 | 190 |
| பெரிய வெங்காயம் | 400 | 350 | 280 | 450 | 300 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 400 | 360 |
| வெண்டக்காய் | 450 | 300 | 150 | 500 | 270 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 150 | 140 |
| பயற்றங்காய் | 450 | 400 | 250 | 400 | 520 |
| லீக்ஸ் | 400 | 400 | 380 | 500 | 350 |
| பீற்றூட் | 350 | 250 | 300 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 650 | 450 | 800 | 550 |
| முருங்கைக்காய் | 1600 | 1800 | 1000 | 1200 | 1200 |
| போஞ்சி | 350 | 350 | 450 | 500 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 170 | 180 | — |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 50 | 60 | 50 |
| தேசிக்காய் | 150 | 200 | 120 | 150 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 90 | 70-100 | 50-100 |
| இராசவள்ளி | 350 | 400 | 300 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 180 | 300 | 130 |
| முள்ளங்கி | 100 | 150 | 100 | 200 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 90 | 80 | 120 |
| வல்லாரை | 40 | 50 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 120 | 80 | 200 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசிய...

சில மாதங்களாக படிப்படியாக வலுவடைந்து வருவதாகவும் இதன்படி, இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட வேண்டியது அவசியம் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைந்தமையின் பலன், மார்ச் முதல் வாரத்தில் இருந்து பொதுமக்களுக்கு கிடைக்கும் என தான் நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி அத்தியாவசிய பொருட்களை விநியோகிப்பதற்காக விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் இறக்குமதியாளர்களுடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடியுள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்தார். (ம-7)

## கத்தியால்...

என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

வீதியால் பயணித்த குறித்த இளைஞனை வழிமறித்த மற்றுமொரு இளைஞன் கத்தியால் குத்தியுள்ளார்.

இந்நிலையில், படுகாயமடைந்த இளைஞன் மாங்குளம் ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

மேலும், சம்பவம் தொடர்பில் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## உக்கிரமடைந்...

இதற்காக இந்தியாவின் பதிலை எதிர்பார்த்துள்ளதாகவும் அதன்பின்னர் மீனவர் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

கடற்றொழில் அமைச்சு இந்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் எனவும் தேவை ஏற்பட்டால் வெளிவிவகார அமைச்சும் அதில் பங்கேற்கும் எனவும் வெளிவிகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார். (ம-7)

## மத்திய வங்கி...

உள்ள பிராந்திய அலுவலகத்திற்கு வருகை தந்திருந்தார்.

எனினும் ஊடகங்களிற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தேர்தலை...

தலைப்பிலான முன்மொழிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று கொழும்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேர்தலை நடத்துவது தொடர்பில் பாட்டலி சம்பிக்க ரணவக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

"நாட்டின் வீழ்ச்சி அடைந்த பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசு கடந்த இரண்டு வருடங்களில் கடுமையாக உழைத்துள்ளது" என்றும் இதன்போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மறுசீரமைப்புத் தீர்மானங்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மிகச்சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு அரசு செயற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி,

அனைவரினதும் ஆதரவுடன் அதனை மேலும் நடைமுறைப்படுத்துவதே தமது நோக்கமாகும் என்றும் தெரிவித்தார். அரசியல் பேதமின்றி நாட்டுக்கான பொதுவான வேலைத்திட்டத்தில் இணையுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் விடுத்துள்ள திறந்த அழைப்பையும் நினைவுகூர்ந்த ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் ஏனைய அரசியல் கட்சிகளின் அனைத்து சாதகமான முன்மொழிவுகளையும் உள்ளடக்குவதற்கு தயங்கமாட்டேன் என்றும் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான சர்வதேச நாணய நிதியத்துடன் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேச்சில் ஏனைய அரசியல் கட்சிகளும் பங்கேற்க சந்தர்ப்பம் வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி நல்ல பதிலை வழங்கினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இந்திய...

களின் சம்மே[illegible] துள்ளது.

யாழில் உள்ள அவர்களது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே, அந்த அமைப்பின் பிரதிநிதி பாக்கியநாதன் றேகன் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்திய இழுவை படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தொழில் முதல்களை அழித்து வந்த வேளை, எமது கடற்படையினரால் இந்திய இழுவைப்படகுகள் கைப்பற்றப்பட்டு அதில் பயணித்த கடற்றொழிலாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

இப்போது இந்திய அரசாங்கம், அந்த கடற்றொழிலாளர்களை விடுதலை செய்யுமாறு எமது அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுத்து வருகிறது.

எங்களுடைய வளங்களை அழித்தவர்களை எப்படி விடுதலை செய்ய முடியும்? அவர்களுக்குரிய தக்க தண்டனை கொடுத்த பின்னரே அவர்களை விடுதலை செய்யலாம்.

எங்களுடைய வளங்களை சூறையாடி தங்களது பிழைப்புகளை நடத்தியவர்கள், தங்களது கடற்றொழிலாளர்களை எமது அரசாங்கம் பிடித்து வைத்துள்ளபோது அவர்களை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றார்கள்.

இதன் காரணமாக அடுத்த வாரத்தில் எமது கடற்றொழிலாளர்கள் இணைந்து கறுப்புக்கொடி போராட்டம் ஒன்றினை இலங்கை - இந்திய கடல் எல்லையில் நடத்த உள்ளோம்" என்றார். (ம-7)

## சட்ட...

அமைவாகவே நாங்கள் செயற்படுகிறோம். அடுத்த ஆண்டு திருவிழாவுக்கு முன்னர் சுமுகமான தீர்வு எட்டப்படும் என்று எதிர்பார்க்கிறேன் என கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நேற்றுச் சனிக்கிழமை நிறைவடைந்தது. திருவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், கடற்படை தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் வரலாற்று சிறப்புமிக்க வருடாந்த திருவிழாவை சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய மற்றும் இலங்கையின் உறவின் பாலமாக இந்தத் திருவிழா அடையாளப்படுத்தப்படுகிறது.

இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதால் கச்சதீவு திருவிழாவை புறக்கணிப்பதாக இந்திய மீனவர்கள் குறிப்பிடும் நியாயப்படுத்தலை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கையின் சட்டத்துக்கு அமையவே கைதுகள் இடம்பெறுகின்றன. சட்டத்தை மீறும்போது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது எமது பொறுப்பாகும். இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை பல ஆண்டு காலமாக தொடர்கிறது. இதற்கு பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். அடுத்த திருவிழாவுக்கு முன்னர் முரண்பாடற்ற தீர்வு ஒன்று காணப்பட வேண்டும். இந்திய மீனவர்கள் வழமை போல் திருவிழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்றார். (ம-7)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## J & J. Tailors

தையல் பயிற்சி வகுப்புக்கள்
புதிய மாணவர்கள்
(பெண்கள்)
சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
தொழில் வாய்ப்பும் உண்டு.

**077 452 2224** (19169)

## மணமகள் தேவை

1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

Viber or Whatsapp
**0044 7578 626565**
**077 251 9150**
Email add: rajasasikumar@gmail.com (19217)

## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு
**077 544 8503** (19118)

## காணி விற்பனைக்கு

புலோப்பளை பளையில் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
**076 56 47 848** (19238)

## DISH ANTENNA TECHNICIANS தேவை

கொழும்பில் இயங்கிவரும் SATELLITE மற்றும் கேபிள் டி.வி உபகரணங்கள் விற்பனை மற்றும் சர்வீஸ் செய்யும் கடைக்கு டிஷ் ஆன்டென்னா பிட்டிங் செய்யக்கூடிய மற்றும் ELECTRONICS TECHNICIANS தேவை.தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய இருவர் தேவை. உணவு தங்குமிடம் மற்றும் திறமைக்கு எற்ப சம்பளம் மற்றும் மேலதிக வேலைக்கான கொடுப்பனவுகள் கிடைக்கும், உடன் தொடர்புகொள்ளவும்.

ராஜன் **077 771 0785** (19223)

## கணக்கீடு உதவியாளர் தேவை
## Account Assistant

மீசாலையில் இயங்கும் SVIS Distributors (Pvt)Ltd கணக்கீடு உதவியாளர் தேவை.
ஆண், பெண் இருபாலரும்.
தகைமை: உயர்தர கணக்கீட்டு துறை படித்தவர்கள்.

**077 211 0996**
**077 245 4224** (19259)

## Show Money

விசா பெற்றுக்கொள்வதற்காக சகல நாடுகளுக்கும் Show money வசதி செய்து கொடுக்கப்படும்.

**074 173 7684** (19242)

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
**077 986 5457** (19213)

## காணி விற்பனைக்கு

ஊரெழு அம்மன் கோவிலில் இருந்து 200 m இல் 20 பரப்பு காணி விற்பனைக்குண்டு. காணி நன்னீரூற்றுக்கொண்ட குடியிருப்புப் பிரதேசம்

**077 390 2994**
**077 321 5353** (19257)

## IELTS - 24.02.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (19193)

## சிங்களப் பாடநெறி வகுப்புக்கள்

- Grade 6 -11 (School Text Book)
- Spoken Sinhala (Students & workers - 3 months)
- O/L Sinhala Exam (past paper classes & Special coaching classes)

**077 615 4450** நல்லூர் (19184)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

## வேலைவாய்ப்பு (Job Vacancy)

### சந்தைப்படுத்தல் நிர்வாகி (Marketing Executive)

**தகைமைகள் (qualification)**

- கிளிநொச்சி நகரத்திற்கு அண்மித்த இருப்பிடத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
- 32 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- 3 வருடம் சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**070 352 4323** (19179)

## பிரபல ஜோதிடர் குமாரசாமி யாழ் விஜயம்

திருமணத்தடை, மணவாழ்க்கையில் நிம்மதி இல்லையா? காதல், நோய், கல்வியில் மேன்மை இன்மை, தொழில் மேன்மை இன்மை அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் முன் அனுமதி பெற்று வரவும்

**077 877 8470**
இடம் : தெறேசா இன் (THERESA INN)
72, றக்கா வீதி, சுண்டுக்குளி (19219)

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

**STUDY IN UK & WORK VISA**

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு
நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்

**WEC COLLEGE**
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
Whatsapp: 0094779265447
0212050988,0217200989
கிளை : சங்கத்தானை,சாவகச்சேரி (19252)

## திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு அருகாமையில் நேர்முன்பாக உள்ள 5 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

**076 206 1703** (19241)

## மெட்டி ஒலி திருமண சேவை

ஐரோப்பாவிலுள்ள மணமகள் மணமகள் (சூரிய -செவ்) படித்த மணமகள், மணமகள் தேவை.
சிங்களம் தெரிந்த பெண் வேணும்.
உங்கள் தகுதிக்கு ஏற்பவும் வரன் பார்த்துத் தரப்படும்.

**074 026 6554, 077 335 2262**
**0094764752219**
(WhatsApp, Viber Only) (19265)

## தேவை

யாழ்ப்பாண ஸ்டான்லி வீதியில் உள்ள உணவகத்திற்கு பரோட்டா, தந்தூரி நாண் செய்பவர், சுத்தம் செய்பவர், பெண் வரவேற்பாளர் தேவை.

**075 440 5362** (19260)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 269 /= | |
| 1 Kg அரிசி மா | - | 196 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 189 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - | 294 /= | |
| 1 Kg றவை | - | 285 /= | |
| 1 Kg தீட்டல்பச்சை அரிசி | - | 168 /= | |
| 10 Kg விஜிதா ஆட்டக்காறி | - | 1940 /= | |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - | 365 /= | ~~450/=~~ |
| 180g Protinex | - | 1799 /= | ~~2000/=~~ |
| 70g Baby Soap | - | 112 /= | ~~145/=~~ |
| 01 Lux Soap | - | 145 /= | ~~175/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - | 140 /= | ~~175/=~~ |
| 425g Supiri ரின்மீன் | - | 480 /= | ~~650/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - | 50 /= | ~~80/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - | 440 /= | ~~480/=~~ |

1065/=




~~1110/=~~
Max - 02

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 808[illegible] (19272)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-8409)

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.
சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777 (C-8409)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

புலோலி பருத்தித்துறையில் உள்ள வீடொன்றில் வீட்டுவேலை செய்து, பிள்ளைகளை பராமரிக்க 40-50 வயதுடைய பணிப்பெண் தேவை. (19262)

**077 459 7938**


## வேலையாட்கள் தேவை

எமது உணவகத்திற்கு கொத்து வேலை தெரிந்த வரும், அவருக்கு உதவி ஆளும் உடன் தேவை. (19254)

**077 629 0894**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, [illegible] றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## வியப்பூட்டும் கின்னஸ் சாதனை

கின்னஸ் உலக சாதனையில் பல்வேறு துறை சார்ந்த சாதனைகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த பீட்டர் வான் டாங்கன் புஸ்கோவ் என்பவர் 68 தீக்குச்சிகளை மூக்கில் திணித்து வியப்பூட்டும் கின்னஸ் சாதனை படைத்துள்ளார். இதனை கின்னஸ் சாதனை நிறுவனம் அங்கீகரித்துள்ளது.

இது தொடர்பாகப் பேசிய பீட்டர், "குழந்தைப் பருவத்தில்கூட மூக்கில் பொருட்களை திணிப்பதைப் பற்றி ஒருபோதும் நினைத்ததில்லை. ஆச்சரியப்படும் விதமாக மூக்கின் தீக்குச்சிகளைத் திணித்தபோது அவை என்னைக் காயப்படுத்தவில்லை. எனக்கு பெரிய மூக்கு மற்றும் மிகவும் நீளமான தோல் என்பது சாதனை செய்வதற்கு எளிமையாக இருந்தது.

இந்த முறை எனது மூக்கில் 68 தீக்குச்சிகளை மட்டுமே திணிக்க முடிந்தது என்றாலும் எதிர்காலத்தில் இந்தச் சாதனையை நானே முறியடிக்க விரும்புகிறேன். இதுபோன்ற முயற்சிகள் ஆபத்தான விளைகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. எனவே இத்தகைய செய்திகளையும் சாதனைகளையும் பார்த்து மற்றவர்களும் இதுபோன்ற விடயங்களை முயன்று பார்க்க வேண்டாம் என்று மருத்துவர்கள், வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

# மீராவின் கிருஷ்ண பக்தி!

கிருஷ்ணன் மீது மீராவுக்கு மாறாக் காதல், தீரா பக்தி. சில நேரங்களில் கிருஷ்ணனை நினைத்து, தன்னை மறந்து தெருவில் இறங்கிப் பாட்டுப் பாடியபடி, நடனமாட ஆரம்பித்துவிடுவார்.

அப்போதெல்லாம் அவமானத்தால் குறுகிப்போவார்கள் குடும்பத்தினர். கோபத்தில் அவரைக் கொலைசெய்யக்கூடத் துணிந்தார்கள். எப்படியோ தப்பித்தார் மீரா. ஒருகட்டத்தில் ஊரைவிட்டே துரத்தப்பட்டார்.


கிருஷ்ணனை, "பகவானே" என்று அழைக்கவில்லை 'என் அன்பே ' என்று அழைத்தார் மீரா. இறைவன் மீதுகொண்ட காதல், கிருஷ்ணனோடு மீராவை இரண்டறக் கலக்கச் செய்துவிட்டது. ஒருமுறை மதுராவுக்குப் போனார் மீரா.

அங்கே மிகப்பெரிய கிருஷ்ணன் கோயில் இருந்தது. அங்கிருந்த தலைமைப் பூசாரி, தன் வாழ்க்கையில் எந்தப் பெண்ணையும் பார்ப்பதில்லை என்று விரதமிருந்தார்.

கோயிலுக்குள் எந்தப் பெண்ணையும் அனுமதிப்பதில்லை. அவரும் கோயிலைவிட்டு வெளியே செல்ல மாட்டார். அன்றைக்குக் கோயில் வாசலில் மீரா நடனமாடினார்.

அந்தப் பாடலிலும் நடனத்திலும் கோயில் காவலர்கள் அவரைத் தடுக்க மறந்துபோனார்கள். மீரா கோயிலுக்குள் நுழைந்தார். அவரைப் பார்த்ததும் பூசாரி கத்தினார். "பெணகள் இங்கே வரக் கூடாது. வெளியே போ!"

மீரா சிரித்தார். "என்னைப் பொறுத்தவரை கடவுளைத் தவிர எல்லோருமே பெண்கள்தான். நீங்களும்தான். முப்பது வருடங்களாக கிருஷ் ணன் மீது அன்பு செலுத்தி, வழிபட்டுக் கொண்டிருக்கும் நீங்கள், உங்களை ஆண் என்றா நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?" இப்படி இதுவரை யாருமே அவருக்குச் சொன்னதில்லை. பூசாரி, மீராவைக் கைகூப்பித் தொழுதார்.




Bright Nest
FROM LEARNING TO LEADING



"Talk to Me"



**An Interactive Spoken English Program for Primary Children**

"Talk to Me" is a Spoken English Program for high achieving primary children to learn and communicate with confidence.

**Registration Starts** 27th of Feb , 2024 ( செவ்வாய்க்கிழமை )

**Registration Ends** 3rd of March , 2024 ( ஞாயிற்றுக்கிழமை )

**Hiring Additional Primary English Trained Teachers :**
- Teachers with 2 years minimum British Council experience
- Energetic and passionate about teaching primary level classes
- Retired Teachers

**Registration at Boundless Futures Center**

Weekdays : 3.00 PM - 6.00 PM
Weekends : 9.00 AM - 6.00 PM

**Grade level**
[ Grade 1 | Grade 2 | Grade 3 ]

**Teaching based on Supplementing School Curriculum :**
- Individual Attention
- Small batch size
- Personal Development
- Focus on Spoken Ability

- 45 minutes inside classroom activities
- 30 minutes Recreational Activities to enhance Creative Learning
- Three classes (each 1 hr and 15 minutes) per week
- Admissions Limited

**Program Start Date March 9 , 2024**

**Registration Fee Rs.500 per Term**
**( Classes will be conducted free of charge )**
**Contact : 0702327827**

Boundless Futures (Pvt) Ltd
49/21 , கந்தையா உபாத்தியார் வீதி , கந்தரோடை
www.brightnest.org

Sponsored by Boundless Futures USA

(C-2244)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 415





இவ்வளவு நிகழ்ச்சிகளும் காவிக் கோட்டினால் தத்ரூப சித்திரங்களாக அச்சுவரில் வரையப்பட்டிருந்தன. இளவரசர் அருள்மொழி வர்மர் அளவில்லா ஆர்வத்துடனும் அதிசயத்துடனும் அச்சித்திரங்களைப் பார்த்துக் கொண்டு வந்தார். கடைசிச் சித்திரம் வந்ததும் இளவரசர், "நதியிலிருந்து காப்பாற்றப்பட்ட சிறுவன் நான் காப்பாற்றியவள் நீ!" என்று சமிக்ஞையாகச் சுட்டிக் காட்டினார். அந்த மூதாட்டி இளவரசரைக் கட்டி அணைத்துக் கொண்டு உச்சி மோந்தாள்.

பின்னர் அந்த மண்டபத்தின் இன்னொரு மூலைக்கு இளவரசரை அழைத்துச் சென்றாள். அங்கே எழுதியிருந்த சில சித்திரங்களைக் காட்டினாள். அவை அவளுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் அல்ல. இளவரசருக்கு நேரக் கூடிய அபாயங்களைப் பற்றி அச்சித்திரங்களின் மூலமாகவும் சமிக்ஞைகளின் மூலமாகவும் எச்சரிக்கை செய்தாள்.

இவ்வளவையும் வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் மண்டபத்தின் ஓரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். நந்தினியின் முகத்தையும் இந்த ஊமை ஸ்திரீயின் முகத்தையும் வந்தியத்தேவன் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்த்தான். அவன் மனத்தில் பற்பல எண்ணங்கள் உதித்தன. பற்பல சந்தேகங்கள் தோன்றின. அவற்றைக் குறித்துப் பேச அது சந்தர்ப்பம் அன்று எனப் பேசாதிருந்தான். யானைச் சிலைகள் பாதுகாத்த அந்தரங்க மண்டபத்திலிருந்து அவர்கள் வெளியே வந்தார்கள். மூதாட்டி அவர்களை அழைத்துக் கொண்டு அந்த ஸ்தூபத்தின் சிகரத்தை நோக்கி ஏறினாள். அவளுடைய தேக வலிமையைக் குறித்து மற்றவர்கள் அதிசயித்தார்கள். வந்தியத்தேவனுக்கு மிகவும் களைப்பாயிருந்தது. ஆயினும் வெளியில் சொல்லாமல் ஏறினான்.

பாதி ஸ்தூபம் ஏறியதும் நின்று பார்த்தார்கள். நகரத்தின் ஓரிடத்தில் தீயின் ஜூவாலை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.

"ஆகா! மகாசேன சக்கரவர்த்தியின் புராதன மாளிகை தீப்பற்றி எரிகிறது!" என்றார் இளவரசர்.

"நாம் படுத்திருந்த இடமா?"

"அதுவேதான்!"

"அங்கே நாம் படுத்துத் தூங்கியிருந்தால்?"

"நாமும் ஒரு வேளை அக்கினி பகவானுக்கு உணவாகியிருப்போம்!"

"அதுதான் நாம் படுத்திருந்த அரண்மனை என்று இத்தனை தூரத்திலிருந்தபடி எதனால் சொல்கிறீர்கள்?"

"மண்டபத்துக்குள்ளே நான் பார்த்த சித்திரங்கள் என்னுடன் பேசின."

"எங்களுக்குக் கேட்கவில்லையே?"

"அதில் ஒன்றும் அதிசயமில்லை. சித்திரங்கள் ஒரு தனி பாஷையில் பேசும். அந்த பாஷை தெரிந்தவர்களுக்குத்தான் அவற்றின் பேச்சு விளங்கும்."

"அந்தச் சித்திரங்கள் தங்களுக்கு இன்னும் என்ன தெரிவித்தன?"

"என் குடும்ப சம்பந்தமான பல இரகசியங்களைச் சொல்லின. இந்த இலங்கைத் தீவை விட்டு உடனே போய் விடும்படியும் தெரிவித்தன!"

"சித்திரங்களின் பாஷை வாழ்க! வைஷ்ணவரே! என் கட்சி ஜெயித்தது!" என்றான் வந்தியத்தேவன்.

"இளவரசே! சித்திரங்கள் அத்துடன் நிறுத்தவில்லை. 'இலங்கையில் உள்ளவரையில் கூரையின் கீழ்ப்படுக்க வேண்டாம். வீடுகளின் ஓரமாக நடக்க வேண்டாம். மரங்களின் அடியில் போக வேண்டாம்' என்றும் சொல்லவில்லையா?" என்றான் ஆழ்வார்க்கடியான். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## முரட்டு ஆடு



அது ஒரு மலையடிவாரம். அதன் அருகே அழகிய ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அங்கே ஆறு ஓடிக் கொண்டிருந்ததால் மலையடிவாரத்தில் பச்சைப் பசேல் என்று புல் வளர்ந்திருந்தது.

மலையடி வாரத்தின் மேலே அங்கங்கே காணப்படும் சமபரப்புப் பகுதியில் சின்னஞ்சிறு வீடுகள் இருந்தன. அங்கு வாழும் மக்கள் தங்களது பிழைப்புக்காக ஆடு, மாடு இன்னும் பிற கால்நடைகளை வளர்த்து வந்தனர். அதிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் வளர்க்கும் ஆடுகள் மலையடி வாரத்தில் வளர்ந்துள்ள புல்லைத் தின்ன அங்கே மேய வரும். மாடுகளால் சரிவில் நிற்க முடியாததால் அவைகள் அங்கு வருவதில்லை.

அங்கே ஒரு முரட்டு ஆடு இருந்தது. உடல் பருத்து, கொம்புகள் இரண்டும் வளர்ந்து முறுக்கிக் கொண்டு நின்றன. அதைப் பார்த்து மற்ற ஆடுகள் பயந்து ஒதுங்கிப் போய்விடும். அதனால் அந்த முரட்டு ஆட்டுக்கு திமிர் வந்து விட்டது. அது மேய்ந்து கொண்டிருக்கும் இடத்தின் அருகே வேறு ஆடுகள் வந்து விட்டால் அவைகளை முட்டி தூர விரட்டி விடும்.

ஒரு நாள் ஆற்றின் கரையோரம் மேய்ந்து கொண்டிருந்த ஆடு ஒன்று ஆற்றினோரம் வந்த முதலையைப் பார்த்து விட்டு பயந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி வந்தது. பயந்து ஓடி வந்த அந்த ஆடு முரட்டு ஆடு மேய்ந்து கொண்டிருந்த இடத்தின் அருகே வந்து விட்டது.

அதைப் பார்த்த முரட்டு ஆடு ஓடி வந்த ஆட்டைப் பார்த்து, "நான் மேய்ந்து கொண்டிருக்கும் இடத்திற்கு நீ எப்படி வரலாம்" என்று கோபமாகக் கேட்டது.

அதற்கு அந்த ஆடு, "அங்கே முதலையைப் பார்த்தேன். அதனால் வேகமாக ஓடி வந்து விட்டேன்" என்று அமைதியாக சொன்னது.

முரட்டு ஆடோ அது சொன்னதைக் கேட்கவில்லை. ஓடி வந்த அந்த ஆட்டுடன் சண்டை போட ஆரம்பித்தது. அந்த ஆடோ சண்டை போட விரும்பாமல் சமாதானமாகவே பேசியது. முரட்டு ஆடோ அது சொன்னதைக் கேட்கவில்லை. வேறு வழியின்றி அந்த ஆடு முரட்டு ஆட்டுடன் எதிர்த்து நின்று ஆக்ரோஷமாக சண்டையிட்டது.

மலைச் சரிவான பகுதியில் இரண்டு ஆடுகளும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் பொழுது முரட்டு ஆடு கால் சறுக்கி மலையடிவாரத்தில் உருண்டு போய் ஆற்றில் விழுந்தது.

ஆற்றின் கரையோரம் வாயைப் பிளந்து கொண்டு காத்திருந்த முதலை அந்த முரட்டு ஆட்டை கௌவிக் கொண்டு ஆற்றினுள்ளே சென்று விட்டது.

தானே பெரியவன் என்ற மமதை ஏற்பட்டால் இதுதான் கதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org